Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNODDAM

வெளியீடு-55 | 10 ஒக்டோபர் 2010 | விலை: 10.00

# பிரதேச சபைகளின் தேர்தல் முன்னரால் மாகாணசபைகளின் தேர்தல் பின்னரால்

பிரதேச சபைகள், மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் ஆகிய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பான சட்டம் அடுத்த மாதம் திருத்தப்பட உள்ளது. இதற்கான சட்ட நகல் சகல மாகாணசபைகளினதும் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது. முன்னரொரு தடவை இவ்வாறானதொரு சட்ட நகல் மாகாண சபைகளுக்கு அனுப்பப்பட்ட போது கிழக்கு மாகாண சபை அதற்கான அங்கீகாரத்தை வழங்கத் தயங்கியது. இதனால் அந்தச் சட்ட மூலம் கிடப்பில் போடப்பட்டது. ஆனால் அரசாங்கம் இப்போது தனது சட்டப் பிரேரணை அனைத்து மாகாணசபைகளாலும் அங்கீகரிக்கப்படும் என்று உறுதியோடு செயற்படுகிறது. வடக்கில் மாகாண சபை இயங்கு நிலையில் இல்லை. அப்படியிருக்கையில் வடக்கு மாகாண சபையின் அங்கீகாரம் தேவையா? இல்லையா? ஏன்ற கேள்வி சில வேளைகளில் உச்சநீதிமன்றத்தில் சில எதிர்க்கட்சிகளால் எழுப்பப்படவும் கூடும். ஏவ்வாறாயினும் எல்லாச் சிக்கல்களையும் எதிர்ப்புக்களையும் மீறி இந்தத் தடவை மஹிந்த அரசாங்கம் தான் நினைத்ததை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் என்றே தெரிகின்றது. அரசாங்கத்துக்கு இப்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதால் அரசாங்கத்தால் எந்தச் சட்டத்தையும் எப்படியும் நிறைவேற்ற முடியும்.

இதன் அடுத்த கட்டமாக அடுத்த வருடம் தை மாதத் திலோ அல்லது மாசி மாதத்திலோ உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நாடு முழுவதும் ஒரே நாளிலோ அல்லது வெவ்வேறு நாட்க ளிலோ நடைபெறும் என்பதுவும் அதுவும் புதிய தேர்தல் முறையில் நடைபெறும் என்புதுவும் இப்போது உறுதியாகிவிட்டது. இந்தப் புதிய முறையின் மூலம் வட்டார முறையில் தனி நபர்களுக்கான போட்டித் தேர்தலும் மற்றும் விகிதாசார முறையில் கட்சிகளுக்கிடையிலான போட்டித் தேர்தலும் கலந்த வகையான ஒரு தேர்தல் முறை அறிமுகமாகவுள்ளது. அதே வேளை ஒவ்வொரு பிரதேச சபைக்கும் முன்னரை விட அதிகமான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் நிலையையும் புதிய சட்டம் உருவாக்குகிறது.

(தொடர்ச்சி 2 ம் பக்கம்)

# யுத்தம் ஓய்ந்த பின்னும் தொடரும் துயரம்



வடக்கு கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தமிழ் மக்களின் மனநிலை மற்றும் துயரங்கள் தொடர்பாக ஐலன்ட் ஆங்கில நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலிருந்து தொகுக்கப்பட்டது.

மக்கள், முன்னர் பீதியுற்றவர்களாயும், எல்லாவற்றையும் அடக்கிவைத்து மௌனம் காப்பவர்களாயும் இருந்தார்கள். ஆனால் கடந்த ஒருவருடமாக அமைதியும் சுதந்திரமுமான உணர்வுகள் பெரியளவில் முன்னேற்றம் அடைந்தள்ளன. கொழும்பு விலைகளுக்கும், யாழ்ப்பாண விலைகளுக்குமிடையில் சற்று வித்தியாசம் காணப்பட்டாலும் பொருட்களின் விலைகள் வெகுவாகக் குறைந்துவிட்டன. மக்கள் தமது தொழில்கள், விவசாயம், மீன்பிடி ஆகியவற்றை மீள ஆரம்பித்துள்ளார்கள். வன்னிப் பகுதியில் நிலமைகள இன்னமும் முழமையாக வழமைக்கு திரும்பிவிடவில்லை. ஆனால் அங்கும் படிப்படியாக நிலைமை வழமைக்குத் திரும்பிவிடும். அரசாங்கம் இராணுவ முகாம்களை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்குப் பதிலாக வன்னிப் பகுதியில் புனர்வாழ்வு முயற்சிகளை விரைவுபடுத்துதல் வேண்டும். அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது ஆனால் மக்களின் அவசியத்துக்கு ஏற்ற விரைவில் அவை நடைபெறவில்லை.போரின் பின்பு வடக்கு மற்றும் கிழக்கில் நிலைமைகள் மிகவும் முன்னேற்றமடைந்துள்ளன. துப்பாக்கிக் குண்டுகள் பறக்கும் ஓசையோ, கொலைகள் நடக்கும் நிலமைகளோ இப்போது இல்லை என்பதால் மக்களுக்கு ஒரு வித நிம்மதி கிட்டியிருக்கிறது.

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

# மேச்சல் தரைக்கு காணிகளை ஒதுக்குக

**பத்மநாபா ஈபிஆர்எல்எவ் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இரா. துரைரத்தினம் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சருக்குக் கடிதம்**



மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில் வாகரை, கிரான்,செங்கலடி, வவுணதீவு, பட்டிப்பளை, வெல்லாவெளி போன்ற பிரதேசப் பகுதிகளில் நீண்ட காலமாக அதிகமானோர் கால்நடைகள் வளர்த்து வருகின்றனர்.

இப் பகுதிகளில் கால்நடைகள் அண்ணளவாக் 174,000 பசுக்களும், 81,500 எருமைகளுமாக 255,500 கால்நடைகள் உள்ளன கால்நடைகளின் மேய்சல் தரையாக காடுகள், மலைகள் தவிர்ந்த கிட்டத்தட்ட 75,000 ஏக்கர் மேய்சல் தரை தேவை. இருந்தும் கிட்டத்தட்ட 50000 ஏக்கர் மேய்ச்சல் தரை தற்சமயம் அளவை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் இப் பணிகளை செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்த அனைத்து அதிகாரிகள், அரசாங்க அதிபர், பிரதேசசெயலாளர்கள், அரசியல்வாதிகள், சங்கங்கள், அனைத்திற்கும் முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். இன்னும் செங்கலடி, வவுணதீவு பிரதேசங்களில் 15000 ஏக்கர் மேச்சல்தரை தேவையாயுள்ளது.

1) அம்பாரை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, நற்பட்டிமுனை, நாவிதன்வெளி போன்ற பகுதிகளில் மேய்ச்சல்தரை இல்லை இதன்காரணமாக கால்நடைகள் அனைத்தும் நீண்டகாலமாக மட்டக்களப்பு மாவட்ட மேச்சல் தரைகளை நோக்கி வருகின்றன.

2) பிரதேச செயலகப் பிரிவுகளான வெல்லாவெளியில் 780 ஏக்கர் பட்டிப்பளை பகுதியில் 5958 ஏக்கர் மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இப் பிரதேசத்தில் காணி இல்லாத காரண த்தால் மிகக்குறைந்தளவு காணியே மேய்ச்சல்தறைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

3) அம்பாரைமாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, நற்பட்டிமுனை, நாவிதன்வெளி மட்டக்களப்பு

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)

# மாறிவரும் உலகில் மாற வேண்டும் எம் நிலை

**பத்மநாபா ஈபிஆர்எல்எவ் பொதுச்செயலாளர் தி.ஶ்ரீதரன்**

தென்னாசியாவிலோ அதனை அண்டிய பகுதிகளிலோ சர்வாதிகாரம் வன்முறை என்பன பலவீனமடைவதற்கான நிலைமைகளே உள்ளன.



இலங்கையின் உண்மையான மானசீகமான தேசிய ஒருமைப்பாட்டை விரும்புபவர்கள் இங்குள்ள சமூகங்களிடையே அதிகாரப் பகிர்வையும் ஏற்றுக்கொள்ளாமலிருக்க முடியாது

சமூகங்கள் நெருக்கமாக செயற்படுவதறகான நெகிழ்வுத்தன்மை எமது அரசியல் யாப்பிலும் சமூக வாழ்விலும் உறுதி ப்படுத்தப்பட வேண்டும்.

உலகில் ஒரு காலத்தில் பெருமித உணர்வுகளால் உந்தப்பட்டு மேலாண்மை நிலையிலிருந்த சமூகங்கள் இன்னொரு காலகட்டத்தில் அந்த மேலாண்மையை இழந்தன

வரலாறு பூராகவும் தேசங்களினதும் நாடுகளினதும் எல்லைகள் மாறி வந்திருக்கின்றன.

சமூக அநீதிகள் காலணித்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் பல நாடுகளும் சமூகங்களும் வெற்றி பெற்றிருக்கின்றன.

சூரியன் மறையாத சாம்ராட்சியங்கள் எல்லாம் வீழ்ச்சி கண்டிருக்கின்றன.

புதிய சர்வாதிகார அரசுகளும் எழுச்சி பெற்றிருக்கின்றன.


இன்னும் போராட்டங்களும் கெடுபிடி யுத்தங்களும் ஓய்ந்துவிடவில்லை

உலகில் புதிய தலைமைத்துவங்களாக இந்தியாவும் சீனாவும் ஆசியாவில் எழுச்சி பெற்று வருகின்றன.


இதன் தாக்கங்கள் இலங்கையிலும் பிரதிபலிகாது என்று இல்லை

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)


தமிழ் கட்சிகளின் அரங்கம் பக்கம்- 03




காதில் இனிக்கும் செய்திகள் பக்கம்- 04



பக்கம்- 05

இடர்கள் நிறைந்த வாழ்வு பக்கம்- 06



ஆவோமா ஆசியாவின் அதிசயமாக பக்கம்- 07



கண்ணோட்டம்
Kannottam



## சமூகப் பாதுகாப்பு உணர்வை உறுதிப்படுத்தும் கட்டமைப்பு அவசியம்

பாரம்பரியமாக மக்கள் கூட்டமொன்று ஒரு பகுதியில் வாழும்போது அதன் இனசமூக பரம்பலிலோ வீதாசாரத்திலோ மாற்றத்தை ஏற்படுத்த முயலுதல், கலாச்சார ஆதிக்க ஊடுருவல்களை நடாத்துதல், மதங்களைத் திணிப்பது ஊர்ப்பெயர்களை, இடப் பெயர்களை பேரினவாத கண்ணோட்டத்துடன் மாற்றுவது அவற்றை ஆக்கிரமிப்பு மனோபாவத்துடன் செயற்படுத்துவது இவை பல்லினங்களைக் கொண்ட ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு எதிரான செயற்பாடுகளாகும். - இவை ஒரு தேசம் என்ற உணர்வையும் பற்றுதலையம் கட்டியெழுப்புவதற்கு எதிரான செயல்களாகும்.

- உற்பத்தியில் ஈடுபடுவதற்கான நிலம் இடம் பிரதேசம் ஆகியன உற்பத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுவதற்கு வகையாக செழுமைப்படுத்தப்பட வேண்டும்
- தொழில் உபகரணங்கள் வழங்குவது, கல்விச்சாலைகளை நிறுவது சூழல் பற்றி விழிப்புணர்ச்சிகளை ஏற்படுத்துவது அபிவிருத்தியின் முக்கியமான விடயங்களாகும்
- சூமூகமான போக்குவரத்துகள் இலகுவான சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கான கட்டமைப்புகளும் வசதிகளும் ஏற்படுத்தப்படவேண்டும்
- மக்களின் மனதில் சுதந்திர உணர்வும், அமைதியும் நிலவ வேண்டும். படித்தோர் மத்தியில் அறிவையும் உண்மைகளையும் விடாது தேடுகின்ற உணர்வும் பழக்கமும் அதிகரிக்கப்பட வேண்டும்
- விவசாயிகளுக்கு விதைபொருட்கள் மற்றும் உணவுப் பயிர்களை நோயிலிருந்து பாதுகாக்கும் இயற்கை இராசயணங்கள் அத்துடன் வேறு தொழில்களுக்கான உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும்
- நூல் நிலையங்கள் விளையாட்டு திடல்கள் மன உடல் ஆரோக்கிய நிலையங்கள் தரமானவையாக ஸ்தாபிக்கப்பட வேண்டும்
- நல்ல கலை கலாச்சாரங்களை வளர்ப்பதற்கான வளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்

யாரும் அனாதரவானவர்கள் அல்ல என்ற உணர்வு மேலோங்கும் விதமாக சமூகப் பாதுகாப்பு உணர்வு, கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

யுத்தத்தால் பெற்றோரில் இருவரையோ அல்லது ஒருவரையோ இழந்த பிள்ளைகள் தொடர்பிலும் அதேபோல யுத்தத்தால் பல்லாயிரக்கணக்கில் பெண்கள் விதவைகளாக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறான பெண்களிற் பெரும்பாலோர் தத்தமது குடும்பத்துக்குத் தலைமை தாங்கி குடும்பப் பாரம் முழுவதையும் சுமக்க வேண்டிய கட்டாயத்துக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறாக பாதிக்கப்பட்ட பெண்கள் ஆனாதரவானவர்கள் மற்றும் ஊனமுற்றதால் வாழ்க்கையில் அல்லற்படுபவர்கள் தொடர்பாக இந்த சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியமாகின்றன.

மனிதர்களையும் இயற்கையையும் நேசிக்கும் பண்பாட்டு விழிப்புணர்ச்சி மக்கள் மத்தியில் அதிகரிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு தேசிய சமூகம் மற்றைய தேசிய சகசமூகங்களிலிருந்து அன்நியப்படும் மனநிலை உருவாகுவதற்கான காரணிகள் அகல வேண்டும்

இந்த நாட்டில் மொத்த அரசியல் முறையில் சிங்கள இனத்தவர்களே பிரதான பங்குதாரர்கள் என்பதை நிலை நாட்ட முற்படும் அரசு இந்த நாட்டின் வடக்கு கிழக்கின் அரசியல் முறைமையில் தமிழ்களே பிரதானமான பங்குதாரர்கள் என்ற உணர்வை யதார்த்தமாக ஏற்படுத்துதாதுவிடின் யுத்தத்தில் அரசு அடைந்துள்ள வெற்றி உட்பட இங்கு மேற்கொள்ளப்படும் எல்லாமே ஓட்டைக் குடத்தில் ஊற்றிய நீராகிவிடும்

அதிகாரப்பகிர்வு கட்டமைப்பொன்று ஏற்படுத்தப்படாமல் பேரினவாத மேலாதிக்கவாத செல்வாக்கு அதிகமாக இருக்குமிடத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் வேண்டா வெறுப்பாக மேற்கொள்ளப்படுமிடத்து அது அராஜக வகைப்படுத்தப்பட்டதாக மாறிவிடும் அது வடக்கு கிழக்கை இலங்கையின் குப்பைக் கூடையாக மாற்றிவிடும்

எனவே சமூகத்திற்கு நேரடியாக பதிலளிக்க கடப்பாடுடைய மொழியால் புரிந்துகொள்ளக் கூடிய பிராந்திய அரசு இங்கு அவசியப்படுகின்றது.

அரசியல் அதிகாரப் பகிர்வு முறைமை அர்த்தமுள்ளதாக்கப்படுவது பலப்படுத்துவதென்பதே இங்கு முக்கியமானது

மொழி, மத, சமூக நம்பிக்கைகள் வேறுபட்ட சமூகங்கள் ஒன்றிணைவதற்கான அடிப்படை இதுவே இங்கு சகல சமூகங்களினதும் சுயமரியாதை கௌரவம் பாதுகாக்கப்படும் தங்கு தடையற்ற வளர்ச்சி நடைபெறும்

இத்தகைய வண்ணங்களின் கலவையான நாடுகள் உலகில் வெற்றிகரமானவையாக இருக்கின்றன.

## யாழ் பல்கலைக் கழகத்தை விஸ்தரிக்க இந்தியா உதவி

யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்தில் பொறியியல் பீட மொன்றை அமைக்கவும் விவசாய பீடத்தை விஸ்தரிக் கவும் இந்தியாவின் உதவியைப் பெறவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ். பி. திசாநாயக்கா தெரிவித்துள்ளார். உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள அமைச்சர் திஸாநாயக்க, இந்திய மனித வள அபிவிருத்தி அமைச்சர் கபில் சிபிலை (28) சந்தித்தார். அப்போதே மேற் குறித்த விடயம் தொடர்பாக அவர் இந்திய அமைச்சருடன் பேசினார். அத்துடன் பிரபல இந்திய பேராசிரியர்களையும் சிரேஷ்ட விரிவுரையாளர்களையும் அவர்களது விடுமுறை நாட்களில் இலங்கை பல்க லைக்கழகங்களில் விரிவுரை யாற்றும் வாய்ப்பு பற்றியும் அமைச்சர் திஸாநாயக்க ஆராய்ந்து வருகிறார். அத்துடன் இலங்கை விரிவுரையா ளர்களுக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கும் சாத்தியம் பற்றியும் இரு அமைச்சர்களும் பேசியுள்ளனர்.

## பிரதேச சபைகளின் தேர்தல் முன்னரல் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி )

இச் சட்டத்தினால் பொதுவாக ஜனநாயகத்துக்கு ஏற்படக் கூடிய தாக்கங்கள் பற்றியும். இலங்கையின் தேசிய சிறுபான்மை இனங்களுக்கான பிரதிநிதித்துவம் அவ்வப் பிரதேச சபைகளில் எவ்வாறு இருக்கப்போகிறது என்ற பிரச்சினையும் இவை தொடர்பான வட்டார எல்லை நிர்ணயங்கள் எவ்வாறு அமையப் போகின்றன என்பதுவும் மிக ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயங்களாக உள்ளன. அத்துடன் இச்சட்டத்தினால் சிறிய கட்சிகளும் சுயேட்சை வேட்பாளர்களும் மிகவும் பாரதூரமான பாதிப்புக்கு உள்ளாக நேரும் என்பதுவும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயமாகும்

இதேவேளை பிரதேச சபைகளில் பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் கணிசமான இடம் வழங்கப்பட வேண்டும் என்ற அக்கறையுடன் புதிய தேர்தல் முறை அறிமுகப்படத்தப்பட இருப்பதுவும் கவனத்திற்குரியதொன்றாகும்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டதும் அதே வேகத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தல் திருத்தச் சட்டமும் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படவுள்ளது. பிரதேச சபைகள் தொடர்பாக மேலே கூறப்பட்ட அத்தனை பிரச்சினைகளும் புதிய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பாகவும் எழ உள்ளன. எனவே அவை குறித்த கரிசனைகளும் கருத்து விவாதங்களும் காரசாரமாகவே இருக்க வாய்ப்புக்கள் உள்ளன. ஏன்னதான் நடந்தாலும் மஹிந்த அரசாங்கம் நினைத்ததை முடிக்காமல் விடப் போவதில்லை என்பது வெளிப்படை.

வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தலகள் புதிய தேர்தல் முறையின் அடிப்படையிலேயே நடக்கவுள்ளன. ஆந்த வகையிலேயே வடக்கு மாகாணத்துக்கான தேர்தலும் நடைபெறும் என்பது திண்ணம். கிழக்கு மாகாணம் கூட கலைக்கப்பட்டு புதிய முறைப்படி தேர்தல் நடத்தப்படலாம் என்பதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகவே உள்ளன.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் ஏப்ரல் அல்லது மே மாதத்துக்குள் நடாத்தப்படும் என அரசின் சில முக்கிய அமைச்சர்கள் கூறுகின்றனர். ஆனால் அரசாங்கம் வடக்கு கிழக்கில் பிரதேச சபைகளுக்கான தேர்தல்களின் முடிவுகளைப் பொறுத்தே மாகாண சபைத் தேர்தல் எப்போது என்பதைத் தீர்மானிக்கும் என்பது உறுதியாக ஊகிக்கப்படக் கூடிய ஒன்றாகும்.

எவ்வாறாயினும் அடுத்த வருடத்தில் எந்த வேளையிலும் வடக்கு பெரும்பாலும் கிழக்கு மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெறும் என்பதை எதிர்பார்க்கலாம்.

தமிழ் மக்களின் உரிமை, சுதந்திரம், தேசியம், சுயநிர்ணயம் என்று சொல்லாடல்கள் நடத்தும் தமிழ்க் கட்சிகள் வடக்கில் மாகாண சபைத் தேர்தல் ஒன்று வருவதை மனதார விரும்புகிறார்களா என்று கேட்டால் இப்போதைய நிலையில் எந்தவொரு தமிழ்க் கட்சியும் விரும்பவில்லை என்ற பதிலை அக்கட்சிகளினுடைய தலைவர்களின் உள்ளங்களைப் படம் பிடித்தால் கண்டு கொள்ள முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எப்போதும் பொறுப்புக்களைத் தலையில் சுமக்காமல் மக்களை உணர்ச்சி ஏத்தி உசுப்பேத்தும் எதிர்க்கட்சி அரசியல் நடத்துவதில் மட்டுமே சுகம் காணுப



வர்கள். அவர்கள் மாகாண சபையை ஏற்றால் கையிலிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கே ஆப்பு வைக்கும் ஒன்றாகி விடும் என்று அஞுசுகின்றனர். தமிழ் அரசியல் பெரும்பாலும் எதிர்ப்பு அரசியலிலேயே சுகம் கண்ட ஒன்று. ஆளும் அரசியலில் அதற்கு அதிகம் பழக்கமில்லை. குற்றம் கணடு பிடிக்கும் நிபுணர்களுக்கு அரைகுறையாகக் கூட ஆக்குவதற்கு ஒன்றும் தெரியாது. அதற்கான துணிச்சலும் இல்லை. அதேவேளை கூட்டமைப்புக்குள்ளே அப்படித்தான் மாகாண சபைக்கு தவிர்க்க முடியாமல் போட்டியிடடாலும் ஏற்கனவே முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டு நிற்கும் பிரேமச்சந்திரனையா?, உதயன் பத்திரிகை வித்தியாதரனையா? புலி சார்பானவர்களின் செல்வாக்குள்ள சிறீதரனையா? முன்னாள் யாழ் மாநகரசபை ஆணையாளர் சிவஞானத்தையா? அல்லது தமிழரசுக் கட்சிக்குள் மூத்தோரின் செல்வாக்கை தன் கையில் வைத்து சேனாதிராஜாவுடன் முட்டிமோதிக் கொண்டிருககும் இளைப்பாறிய பேராசியர் சிற்றம்பலத்தையா? முதலமைச்சா வேட்பாளர் ஆக்குவது என்ற போடடிகளால் எழும்பியுள்ள குழப்பங்களால் சம்பந்தரும் சேனாதிராஜாவும் செய்வதறியாதவர்களாக திகைத்துப் போய் இருப்பதாகக் கேள்வி.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு முதலமைச்சராகத் தான் வராமல் வேறு ஏதாவது கட்சி மாகாணசபையின் ஆட்சியைக் கைப்பற்றினால் இப்போது வடக்கில் அவர் கொண்டிருக்கும் ஏகபோக அரசாங்க பிரதிநிதித்துவத்துக்கு ஆபத்து வந்துவிடும் என்பது அவருக்குத் தெரியும். அதேவேளை தான் முதலமைச்சராக வருவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது எனபதையும் அவர் அறிவார். அது மட்டுமல்லாது, நாமல் ராஜபக்சவும், ரங்காவும் டக்ளஸின் காலைவாரி விடுவதற்கான சந்தர்ப்பங்களை பார்த்திருக்கின்றனர். இந்நிலையில் முதலமைச்சர் பதவிக்காக இருக்கும் கபினெட் அமைச்சர் பதவியையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமாச் செய்து விட்டுப் போட்டியிட்டால் கடைசியில் உள்ளதையும் கெடுத்த கதையாகிவிடும் என்பதை டக்ளஸ் நன்கறிவார். அதேவேளை தனது கட்சியில் சார்பில் வேறு யாரையும் முதலமைச்சராக்கவும் டக்ளஸ் முயற்சிக்கமாட்டார். எனவே அவருககும் மாகாண சபை தேர்தல் வந்தால் எந்தப் பக்கத்தாலும் தனக்கு ஆபத்து என்பதால் இப்போதைக்கு வடக்குக்கு மாகாண சபைத் தேர்தல் வராமல் இருப்பதையே அவர் உள்ளூர விரும்புவார் என்பது தெளிவு.

இதேவேளை, தமிழர்கள் மத்தியில் கடந்த காலத்தில் நாடாளுமன்ற பதவிகளைப் பெறாத தமிழ்க் கட்சிகள் மாகாண சபையிலாவது தமக்கு இடம் கிடைக்காதா என்று ஏங்கி இருந்தாலும் அது தொடர்பாக அவைகள் தெளிவாகவும் உறுதியாகவும் இல்லாததால் அவ்வாறான கட்சிகள் மத்தியிலும் வடக்கு மாகாண சபை தொடாபான அக்கறை பெரிதாக இல்லையென்றே கூறலாம்.

பொதுவாக தமிழர்கள் மத்தியில் எத்தனை வகையான அரசியல் சுலோகங்களும் கோரிக்கைகளும் இருந்தாலும் தமிழர்கள் கொழும்பு நாடாளுமன்றததோடும் அல்லது அடிமட்டத்தில் மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் ஆகியவற்றோடும் கொண்டிருந்து வந்துள்ள அரசியல் உணர்வுகளோடு ஒப்பிடுகையில் இன்னமும் மாகாண சபைகளோடு உளப்பூர்வமான உணர்வு கொண்டவர்களாக இல்லை என்றே கூறலாம்.

எவை என்னவாயினும் பிரதேச சபைகளுக்கான தேர்தல்களும் அடுத்து மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் வரத்தான் போகின்றன. தமிழர்கள் தயாரா? அதற்கும் மேலாக தமிழ்க் கட்சிகள் தயாரா? சுய விருப்பங்களுக்கு அப்பால் கட்சிகளும், தமிழர்களும் தயாராகியே ஆக வேண்டும்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118

# தமிழ் கட்சிகளின் அரங்க கூட்டத்தில்

## நிலம் மற்றும் மீள்குடியேற்றத்திற்கு முக்கியத்துவம்



தமிழ் கட்சிகளின் அரங்கம் 03.10.2010 அன்று கிளிநொச்சியில் தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்தில் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அரசியல் தீர்வு பற் றிய விடயம் தனியாக விவாதிக்கப்பட வேண்டும். மக்களினதும், தமிழ் பிரதே சங்கள் தொடர்பிலான உடனடி பிரச்சி னைகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் குறிப்பாக மீளக்குடியமரும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சமூகமளித்திருந்த கட்சிகளின் பிரதிநிதிகள் பலா் அபிப்பிராயம் தெரிவித்ததைத் தொடர்ந்து உடனடிப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலங்கள் சட்ட ரீதியான நடைமுறைகளுக்கு அமைவாக கையாளப்படாமல் தலையீடுகளும், முறைகேடுகளும் இடம்பெறுவதாக கட்சிகளின் பிரதிநிதிகள் குற்றச்சாட்டுக்ளை முன்வைத்தனா். முருகண்டி ஆலய பிரதேசம் கிளிநொச்சி சந்தை என்பன பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நிலம் குறித்து தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளை பகுப்பாய்வு செய்து குறித்த பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். என தீர்மானிக்கப்பட்டது.

பருவமழை ஆரம்பமாகியுள்ளதால் மீளக் குடியமரும் மக்களின் இருப்பிடங்களை அமைத்துக் கொடுப்பதற்கும் அவர்களது அடிப்படை தேவைகள் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண் பதற்கும் துரித நடவடிக்கை அவசியம் என்பதை அரசுக்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க முன்வந்திருக்கும் அரசாங்கம் யுத்தத்தாலும், புலிகளாலும் பாதிக்கப்பட்ட இதர இயக்கங்கள், கட்சிகளின் அங்கத்தவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவற்கான திட்டங்கள் குறித்தும் அக்கறை செலுத்த வேண்டும் என அரசாங்கத்தை கோருதல் வேண்டும்.

யுத்தத்தின் விளைவாக பிற்ப்பு, இறப்பு மற்றம் அத்தியாவசிய சான்றிதழ்கள் ஆவணங்களை பெறமுடியாதிருக்கும் அல்லது இழந்திருக்கம் பொருந்தொகையான மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அவற்றை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கான வழிவகையை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும்.

இதுவரை பொதுமக்களுக்கான வீட மைப்புத் திட்டங்களில் சொந்த காணி உள்ளவர்களுக்கே வீடு கட்டுவதற்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. சொந்தக் காணி இல்லாத பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ள மக்களும் வீடமைப்பு திட்டங்களால் பயன்பெறக் கூடிய வகையிலான திட்டங்கள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டும். இந்திய அரசாங்கம் வடக்கு கிழக்கில் கட்டிக் கொடுக்க திட்டமிட்டுள்ள 50 ஆயிரம் வீடுகள் கணியற்றவர்களுக்கும் கிடைக்கும் விதமாக காணியற்றவர்களுக்கு அரசகாணிகளை வழங்கி அல்லது பொருத்தமான மாற்று நடவடிக்கை வேண்டும் எனவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ. ஆனந்தசங்கரி, ரி.திருஞானசம்பந்தா் புளொட் அமைப்பின் முக்கியஸ்தா்கள் ஆா்.ராகவன், சு.சதானந்தன் பத்மநாபா ஈபிஆா்எல்எவ் சாா்பில் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சா் அ.வரதராஜப்பெருமாள், யாழ் பிராந்திய செயலாளா் க. சிவராஜா (மோகன்,) ஈபிடிபி செயலாளா் நாயகம் அமைச்சா் டக்ளஸ் தேவனந்தா, பாராளுமன்ற உறுப்பினா் மு.சந்திரகுமாா் (அசோக்) தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான பூ.பிரசாந்தன் தமிழ் தேசிய விடுதலை கூட்டமைப்பின் தலைவா் எம்.கே.சிவாஜிலிங்கம், அக்கட்சியின் துணைச் செயலாளா் சித்திரா நித்தியானந்தன், ஸ்ரீரெலோ அமைப்பின் செயலாளா் ப.உதயராஜா, ஜி.சுரேந்திரன், ஈழ எதிலியா் புனா்வாழ்வுக் கழகத்தின் முக்கியஸ்தா் சட்டத்தரணி எஸ். பேரின்பநாயகம், ஆா்.ஞானசேகரன் மனித உரிமைகள் இல்லத்தை சோ்ந்த செரின் சேவியா், மேகலா சண்முகம் ஆகியோா் கலந்துகொண்டனா்.

## கட்சியின் பிராந்திய மாநாடு



பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் வெளிநாட்டுக் கிளைகளின் பிராந்தியமாநாடு இம்மாதம் 23ம் 24ம் திகதிகளில் பிரான்சில் நடைபெறவுள்ளது. தற்பொழுது வெளிநாட்டுக் கிளைகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைமைக்குழு உறுப்பினர்களும் இம் மாநாட்டில் பங்கு பற்றுவார்கள் கட்சியின் வெளிநாட்டுக் கிளைகளின் கடந்தகால வேலைத் திட்டங்கள் தொடர்பான மீள்பார்வை, இலங்கையில் சமகால நிலமைகள், மக்களின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலையை இலக்காகக் கொண்டு கட்சி எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு தீர்மானங்களும் எடுக்கப்படும். கடந்த காலத்தில் கட்சிப் பணிகளில் ஈடுபட்டு தற்போது தொடர்பற்றிருக்கும் தோழர்கள் இம் மாநாட்டில் பங்குபற்ற விரும்பின் நீங்கள் வசிக்கும் நாட்டிலுள்ள எமது கட்சியின் தொடர்பாளருடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெறமுடியும்.

**சர்வதேசக் கிளைகளின் ஒன்றியம்**
**பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

### இரணைமடு நீர் விநியோகம் ஆனந்தசங்கரி அறிக்கை

யாழ்ப்பாண மாவட்டத்திற்கும் பூநகரி பகுதிக்கும் இரணைமடு குளத்திலிருந்து குடிநீர் விநியோகத்திற்கு அரசாங்கம் எடுத்துள்ள முயற்ச்சி, கிளிநொச்சிப் பகுதி மக்களை பெரும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. தாங்கள் இத்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னர் இப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்களுடனும், இவ்விடயத்தில் நிபுணத்துவம் மிக்கவர்களுடனும் கலந்தாலோசிக்க வேண்டுகின்றேன். இரணைமடுக்குளத்தால் நீர்ப்பாசனத்தை அனுபவிக்கின்ற பகுதிகளில் நெற்செய்கை முற்று முழுதாகப் பாதிக்கப்படும் என்று நம்புகின்றேன். கிளிநெச்சியின் 80 வீதத்திற்கு மேற்பட்ட மக்கள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர் இரணைமடு குளத்து நீரையே நம்பியுள்ளனர். இரணைமடு குளத்தின் கீழ் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகின்றது.என தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## உலக தரிசனம்

- மியன்மாரின் ஜனநாயக இயக்கத் தலைவி அங்சாங் சுஹியை ஐ.நா வின் தூதுக்குழுவொன்று சந்தித்துள்ளது. கால்நூற்றாண்டுக்கு மேலாக நிகழும் இராணுவ சர்வாதிகாரம் எப்போது முடிவுக்கு வரும் ஆங் சாங் சுஹி எப்போது விடுதலையாவார் என்ற ஏக்கம் உலகின் ஜனநாயக மனித உரிமை ஆர்வலர்களிடம் இருக்கிறது. இந்த சந்திப்பின் பின்னராவது முன்னேற்றம் நிகழுமா என எதிர்பார்த்திருக்கின்றனர்.

- இந்தியாவில் மாவோயிஸ்டுக்கள் புலிகளின் வழியில் பொது மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைத்து சமூக பொருளாதா கட்டமைப்புக்களை நாசம் செய்து போராடுகிறார்கள். இதனால் பேரழிவே மிஞ்சும். இதுவே இலங்கை தமிழ் பிரதேசங்களின் அனுபவமுமாகும். அவர்கள் இருப்பதற்கும் வளர்வதற்குமான சமூக அரசியல் நிலைமையே அங்கு உள்ளது. இந்திய அரசின் அபாலிஸ் அணுகுமுறை பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. அதே வேளை மாவோயிஸ்ட்டுக்களின் கண்மூடித்தனமான வன்முறைகளும் பின்தங்கிய மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை எட்ட வழியாகாது. அடிமட்ட மக்களின் அன்பு கலந்த ஆதரவுத் தளத்தில் அவர்கள் காலூன்றியிருப்பது உண்மையானால் அவர்கள் வன்முறையற்ற மக்கள் இயக்கங்களை நடாத்துவதுவும், பேச்சுவார்த்தைகளைக் கையாளவதுவுமே அவர்களுக்கும் நல்லது அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறும் அப்பாவி உழைக்கும் மக்களுக்கும் நல்லது. உலகின் முன்னணி நாடாக எழுச்சி பெற்றுக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கும் நல்லது.

- காஷ்மீரில் திடீரென வன்முறைகளும், ஆர்பாட்டங்களும் நிகழ்கின்றன. இவையொன்றும் தற்செயலாக நிகழவில்லை. இந்தியாவைப் பலவீனமான நிலையிலேயே வைத்திருக்க வேண்டும் என விரும்பும் சர்வதேச சக்திகள் அதற்குத் துணையாக நின்று தூண்டி விடுகின்றன என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். அனைத்துக் கட்சிகளும் இணைந்து காஷ்மீருக்கு விஜயம் செய்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்பட்டிருப்பது நல்ல சகுனமே இந்தியாவின் பிரதான கட்சிகள் அனைத்தும் காஷ்மீா மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்பதில் ஒற்றுமைப்பட்டு நின்று தீர்க்கமாகச் செயற்பட வேண்டும். புயங்கரவாதத்தைக் காரணம் காட்டி உண்மையான ஜனநாயக சக்திகளின் கருத்துக்களையும் வேண்டுகோள்களையும் புறக்கணிப்பது பயங்கரலாதிகளுக்கே உதவும். இந்திய ஜனநாயக அரசியற் சக்திகள் காஷ்மீா் விவகாரத்தை தமது அரசியல் அதிகாரத்தைப் பிடிப்பதற்கான கருவியாகப் பயன்படுத்தாமல் தேசத்தின் வலுவுக்கும் வளர்ச்சிக்கும் அவசியமான ஒன்றாக அணுக வேண்டும் என்பது இந்திய அறிஞர்களின் வேண்டுகோளாகும்.

- ரொனி பிளேயர் அயர்லாந்தில் தனது நூல் வெளியீட்டு விழாவில் பங்குபற்றியிருந்தபோது அவர்மீது சரமாரியாக முட்டைகள் வீசப்பட்டன. ஈராக் ஆப்கானிஸ்தானின் போர் தொடுத்தது தொடர்பாகவே அயர்லாந்தில் இந்த அதிருப்தி எதிர்ப்பு இடம்பெற்றுள்ளது.

- ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் அமைதியை கொண்டுவர முடியாத நிலையில் அமெரிக்க. மேற்குலக படைகள் வெளியேறுகின்றன. உறுதியான நிலைப்பாடு எதனையும் எடுக்க முடியாத நிலையிலேயே சரமாரியாக குண்டுகள் வெடிக்கையில் அவர்கள் வெளியேறுகிறார்கள். நஜிபுல்லாவின் ஆட்சியை மேற்குலக நாடுகள் அன்று சீா்குலைக்காமல் இருந்திருந்தால் இன்று ஆப்கானிஸ்தான் இந்த இரண்டுங் கெட்டான் நிலைக்குப் போயிருக்காது. உலகப் பிரச்சினைகளில் இனியாவது அமெரிக்கா தான் தோன்றித் தனமாக நடந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும். ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா ஆப்பிழுத்த குரங்காக நிற்கிறது. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்பது போல ஏற்கனவே இருந்த நிலையை விட மிக மோசமான நிலையையே அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் ஆப்கானிஸ்தானில் விட்டுச் செல்லப் போகின்றன.

- பாலஸ்தீன தலைவர்களும் இஸ்ரேலிய தலைவர்களும் மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பது நல்ல சமிஞ்கையே. ஆனாலும் இஸ்ரேல் காஸா பகுதியில் ஹமாஸ் தலைவர் ஒருவரை பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கையில் படுகொலை செய்தது. இதனால் இஸ்ரேலின் இதயசுத்தி கேள்விக்குறியாகிறது.

- மரண படுக்கையில் இருந்த கியூபாவின் தலைவர் பிடல் கஸ்ரோ இப்போது மீண்டும் புனர் ஜென்மம் எடுத்து மிகவும் உற்சாகமாக இருக்கிறார். தான் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் வைத்திய துறையிலும் தாம் அனுபவம் பெற்றிருப்பதாக நகைச்சுவையுடன் பேட்டியளிக்கிறார். அமெரிக்காவின் அநீதிகளையும் அதன் தவறான உலக அணுகுமுறைகளையும் சுட்டிக்காட்டுகிறார். ஆத்ம வலுவுள்ள சமூக பிரக்ஞை கொண்ட மனிதர்கள் மீண்டும் மீண்டும் எழுவார்கள் என்பதற்கு யேசுவின் கதை மட்டுமல்ல பிடல் கஸ்ரோ மரணப் படுக்கையிலிருந்து எழுந்திருப்பதுவும் உதாரணமாகும்.

- சீனா தனது இராணுவ மற்றும் பொருளாதார கடல் ஆதிக்கத்தை தென்னாசியாவில் வெளிப்படையாகவே விஸ்தரித்து வருகிறது. பொருளாதார வளர்ச்சியில் ஜப்பான் சீனாவுக்கு பின்னால் வந்து விட்டது. சீனா முதலாவது நாடாக வருவது வெகுதூரத்திலில்லை.

- சீனாவின் ஹுனான் மாகாணத்திலிருந்து இலங்கை கட்டுநாயக்காவுக்கு நேரடி விமான சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

# தலைவன் சொல்றான் தொண்டன் குழம்பிறான்

“தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளைக் கையாளும்போது ஐக்கியத் தேசியக் கட்சி இரு முகம் காட்டுகிறது. தமிழரைத் திருப்திப்படுத்த தமிழர்களுக்கு சார்பாகவும் சிங்களவரைத் திருப்திப்படுத்த சிங்களவர்களுக்கு சார்பாகவும் பேசி, அரசியல் நடத்துகிறது.” இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். ஐக்கியத் தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தமிழ் மக்கள் தொடர்பாக வெளியிட்டுள்ள ஊடக கருத்துக்களுக்குப் பதிலளித்து இன்று வெளியிட்டுள்ள தனது அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிவுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் முடிந்து விட்டதாக திஸ்ஸ அத்தநாயக்க எவ்வாறு கூறமுடியும்? புலிகளின் ஆயுதப் போராட்டம் தோல்வியில் முடிந்ததை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். ஆனால் தமிழ்ப் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வுப் போராட்டம் இன்னமும் முடிவடையவில்லை.

இந்தச் சூழ்நிலையில், போராட்டத்தின் முடிவுடன் எல்லாம் முடிந்து விட்டதாக அத்தநாயக்க கூறுவது எந்த வகையில் நியாயம்? தமிழ் மக்களை நேசிப்பதாகக் காட்டிக் கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு கூறுவதன் மூலம் அதன் இரட்டை முகத்தை வெளிப்படுத்துகிறது” என்றும் அரியநேந்திரன் குறிபபிட்டுள்ளார்.

டி.எஸ். சேனநாயக்கா காலத்திலிருந்தே ஐக்கிய தேசியக் கட்சி தமிழருக்கு பொய்முகம் காட்டியே வருகின்றது. இதில் தமிழ் காங்கிரஸில் ஆரம்பித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரை தங்கள் வர்க்க நலன்களின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ் மக்களின் நண்பனாக தமிழ் மக்கள் மத்தியில் காட்டுவதற்காக ஐக்கிய தேசியக கட்சியின் தமிழ் பிரிவு போல் செயற்பட்டதே உண்மை நிலை. கருணாவின் பிரிவுக்கு சூத்திரதாரிகள் தாம் என ரணில் விக்கிரமசிங்க பத்திரிகைகளில் பிரகடனப் படுத்திய பின்னும் அவர்களுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நெருக்கமான உறவை பேணிவந்தது.

இதன் தொடர்சியாகத்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக கட்சி கூட்டணியின் பிரதான வேட்பாளர் சரத் பொன்சேகாவை தமிழ் மக்களின் மீட்போனாக சித்தரித்து தமிழ் மக்களை பெரும்பான்மையாக அவருக்கு வாக்களிக்க செய்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இப்போது வந்திருக்கும் இந்த ஞானம் அன்றைக்கு எங்கே போனது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரியநேந்திரன் அவர்களே. மீண்டும் சொல்கின்றோம் எதிர்காலத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் உங்களுக்குள்ள உறவு புதுப்பிக்கப்படும். அது உங்கள் வர்க்க குணாம்சம்.

# ஊதிநிக்கும் செய்திகள்

## பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு 249 இலட்சம் நஸ்டஈடு

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட மக்களுக்கு நஷ்ட ஈடாக 249 இலட்ச ரூபாவை வழங்கியதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை அபிவிருத்தி பிரதியமைச்சர் விஜித விஜய முனிசொய்சா தெரிவித்தார். வவுனியா, முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நிகழ்வுகள் வவுனியாவிலும் முல்லைத்தீவிலும் நடைபெற்றன. மேற்படி நிகழ்வுகளில் நேரடியாகக் கலந்து கொண்ட அமைச்சர் டியூ குணசேகர, பிரதியமைச்சர் விஜித விஜயமுனிசொய்சா ஆகியோர் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈட்டுக்கான காசோலைகளை கையளித்துள்ளனர். பிரதியமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மக்கள் கடந்த முப்பது வருட கால யுத்தம் காரணமாக பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றுவது மட்டுமன்றி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

## வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் மீளக்கையளிப்பு

பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இன்று செவ்வாய்க்கிழமை பாதுகாப்புப் படையினரால் கல்வி நடவடிக்கைகளுக்கென கையளிக்கப்பட்டுள்ளது. வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி தெரிவித்தார். சுமார் 20 வருடங்களுக்குப் பின்னர் மீளக் கையளிக்கப்படவுள்ள இந்த பாடசாலையை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான உயர் மட்டக்குழுவினர் இன்று நேரில் சென்று பார்வையிடுகின்றனர்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் உட்பட அந்தப் பிரதேசத்திலுள்ள மேலும் சில பாடசாலைகளை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி தெரிவித்துள்ளார்..

1946 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை சுமார் 64 வருடம் பழைமை வாய்ந்தது என்று வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்தார். பலாலி அதிஉயர் பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டதை அடுத்து 1990 ஆம் ஆண்டு தொடக்கம் வசாவிளான் பாடசாலை யாழ். உரும்பிராய் பகுதியில் தற்காலிகமாக இயங்கி வருவதாகத் தெரிவித்த அவர், தற்பொழுது அங்கு 1352 மாணவர்கள் கல்வி கற்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்தப் பாடசாலை சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரவினால் இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் மத்திய கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டதாக தெரிவித்துள்ள வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பாடசாலையை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் கல்வி அமைச்சின் வேலைத் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவித் திட்டத்தினால் இந்தப் பாடசாலை புனரமைப்பு, நிர்மாணத்திட்டத்திற்கென 60 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாகாண கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பில் இந்திய உதவியுடன் நவீன வைத்தியசாலை

மட்டக்களப்பில் இந்திய நிதியுதவியுடன் 10,000 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்ட புதிய வைத்தியசாலையொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்பக் கட்டப் பேச்சுவார்த்தை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுகாதார அமைச்சில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், சுகாதார அமைச்சின் செயலாளர் ரவிரு பேரூ, இந்திய நிறுவனத்தின் தலை வர் சுனில் அகர்வால் மற்றும் இந்திய அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

தற்போது மட்டக்களப்பில் இயங்கும் போதனா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளைக் கருத்திற்கொண்டு அதற்குப் பதிலாக இப்புதிய வைத்தியசாலை நிறுவப்படவுள்ளது. அத்துடன் இதுவரை காலமும் பெரும் குறைபாடாக இருந்த புற்றுநோய்ச் சிகிச்சை பிரிவொன்றும் இதனுடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்தியாவின் என். ஐ. பீ. எச். ஐ. அபிவிருத்தி திட்ட நிறுவனமும் இந்திய வங்கியொன்றும் இணைந்தே மேற்படி நிதியுதவியை வழங்கவுள்ளன. சிறு கடன் திட்ட அடிப்படையில் இதற்கான நிதி வழங்கப்படவுள்ளது.

## மேச்சல் தரைக்கு காணிகளை ஒதுக்குக _

(1ம் பக்கத் தொடர்ச்சி )

மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுக ளான வெல்லாவெளி பகுதி, பட்டிப்பளை பகுதி இப் பகுதிக்கான கால்நடைகள் சுமார் 75,000 ஐ தாண்டும். இப்பகுதிக்கான கால்நடைகள் அனைத்தும் வவுணதீவு, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுகளில் தான் வழக்கமாக மேய்ச்சலுக்கு வருவதுண்டு.

4) இவை மட்டுமின்றி சிலா் மேய்ச்சல் தரையில் மேட்டு நிலப்பயிா் செய்கையில் காலத்திற்குக் காலம் ஈடுபடுவது வழமையாகும். இவா்களை உடனடியாக வெளியேற்றி இவா்களுக்கும் மேய்ச்சல் தரை அல்லாத காணிகள் பகிா்ந்தளிக்கப்பட வேண்டும். இல்லாதபட்சத்தில் மாவட்ட த்தில் 200 ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பட்டினி கிடக்க நேரிடும

5) மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் மலைகள், காடுகளும் உள்ளடங்கும்.

6) விவசாயச்செய்கை அபிவிருத்தியடைந்து வரும் நிலையில் எதிா்காலத்தில் கால்நடை வளா்க்கும் முறையில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும். எனவே தனிப் பண்ணை முறையில் தான் மாடு வளா்க்க வேண்டியேற்படும். இதற்காக கால்நடை வளா்ப்போா் ஒவ்வொருவருக்கும் எதிா்காலத்தில் குறைந்தது தலா 5 ஏக்கருக்கு மேல் மேய்ச்சல் தரைகாணிகள் வழங்கப்பட வேண்டும்.

எனவே வவுணதீவு, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் இன்னும் மேலதிகமாக 15,000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை மேய்ச்சல் தரைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இந்த நிலையில் இது தொடா்பாக 02.08.2010 அன்று செங்கலடி பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் எமது பிரதேச வாசிகளுக்கு வழங்குவதற்கு காணி இல்லாத நிலையில் வெளியாருக்கு காணிகளை வழங்கக் கூடாது எனத் தீா்மானிக்கப்பட்டது. இவ்வாறு முடிவெடுத்திருந்த நிலையில் 11.09.2010 விவசாயக் குழுக் கூட்டத்திலும் இப் பிரச்சனை முன்வைக்கப்பட்டு மேய்சல் தரைக்கு அதிக காணிகள் ஒதுக்கப்பட வேண்டும் எனத் தீா்மானம் நிறைவேற்றப்பட்டது அதே தினம் மாலை மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட வேண்டுமென தீா்மானித்த பகுதிகளை வெளிநாட்டு கொம்பனிக்கு வழங்குவதற்காக செங்கலடி பிரதேச செயகப் பகுதியில் பெரிய புல்லுமலை, கோப்பாவெளி வவுணதீவு பிரதேச செயலகப் பகுதியில் களிக்குளம் போன்ற இடங்கள் பாா்வையிடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. இப் பகுதிகளில் குறிப்பாக 1000 ஏக்கா் காணிகளை வழங்க முயற்சிகள் நடப்பதாகவும் தெரியவருகின்றது. இது முற்றிலும் தவறானதாகும். இதனால் கால்நடை வளா்ப்போா் கவலையடைந்துள்ளனா். எதிா்காலத்தில் கால்நடை வளா்போா் பெரிதும் பாதிக்கப்படுவா். எமது மாவட்டத்தில் உள்ள மக்கள் 30 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, சுய பொருளாதார வளங்கள் முடமாக்கப்பட்டு, இன்னும் திட்டமிட்டவாறு அபிவிருத்தி வேலைகளிலும், சுயமுயற்ச்சிகளிலும், சுயதொழிலிலும், ஈடுபடுத்த முடியாமல் மெது மெதுவாக முயற்ச்சி செய்ய ஆரம்பிக்கும் வேளையில் வெளிநாட்டவா்களுக்கு புதிய தொழில் நுட்பம் அறிமுகம் என்னும் போா்வையில், எமது இயற்கை வளமுள்ள சொத்துக்கள் சில தனி நபரின் நலன் கருதி விற்கப்படுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. நாம் எதிா்காலத்தில் பிறரிடம் கையேந்தும் நிலைக்கு தள்ளப்படுவோம். இதை வழங்க முற்படுகின்றவா்களுக்கு எமது வளத்தின் வலிமையும், சமூகத்தின் வலியும் தெரியாது என நினைக்கின்றேன் எதிா்காலத்தில் கால்நடை வளா்ப்போா் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமாயின் கூடுதலாக தேவையான மேய்ச்சல் தரைக்கு காணிகளை வழங்க நடவடிக்கை ஏடுக்குமாறும் மேய்ச்சல் தரைப் பகுதியில் காலத்திற்கு காலம் காணியில்லாமல் மேட்டு நிலப் பயிா் செய்யும் காணிகள் அற்ற வறிய குடும்பங்களுக்கும் மேய்ச்சல்தரை அல்லாத காணிகளை பயிா்ச் செய்கைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கமாறும் கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு இரா.துரைரததினம் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாா்.

## மாறிவரும் உலகில் மாற வேண்டும் எம் நிலை ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சீனா என்னதான் சோசலிச கொள்கை என்று சொல்லிக்கொண்டாலும் அங்கு தனிக்கட்சி ஆட்சியே நடைபெறுகின்றது. பாட்டாளி வா்க்கத்தின் ஆட்சி நடைபெறுகின்றதென்றோ பெரும்பான்மையினரின் ஜனநாயகம் நிலவுகின்றதென்றோ கூறிவிட முடியாது.

இந்தியா ஜனநாயக நாடு இயந்திரீகத்தனமான பொருளாதார வளா்ச்சியென்பது இந்தியாவில் சாத்தியமில்லை மக்களின் அரசியல் உரிமைகள், அவை சாா்ந்த இயக்கங்கள் பல்லின மத, சமூகங்களின் தனித்துவமும் ஐக்கியமும் என்றவாறே இந்தியா இயங்குகின்றது. ஏழ்மையை ஒழிப்பதற்கு சமூக அநீதிகளை களைவதற்கு சமூக சமத்துவத்தை நிலை நிறுத்தும் பாதையில் இந்தியா நீண்ட நெடிய பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

தனது சமூக முரண்பாடுகள் இணக்கப்பாடுகள் அரசியல் வேறுபாடுகள் ஒருமைப்பாட்டுடன் இந்தியாவின் வளா்ச்சியென்பது ஒரு பெரும் அறிவுக் கருவூலமாக இந்தியாவை மாற்றியுள்ளது.

பரந்த ஞானமும் பொருளாதார வல்லமையும் என்பது இந்தியாவின் பலம் ஐந்து கண்டங்களுடனும் அச்சுறுத்தல் இல்லாத நட்புறவென்பதும் இந்தியாவை உலக அரங்கில் மிளிரவைத்துள்ளது.

இந்தியாவால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட சீனா இலங்கை உட்பட பல அணிசேரா நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாா்மீகக்கொள்கைகள் இந்தியாவை வலுப்படுத்தவே உதவும்.

புத்தரும் காந்தி அடிகளும் உலகிற்கு அளித்த தாா்மீக வலுக்கள் மிகவும் வளமானவை வன்முறை நிறைந்த இன்றய உலகில் அத்தியாவசியமானவை.

ஆசியாவில் விழுமியங்கள் என்று பாா்க்கையில் இந்தியா மிகப்பெரிய தாா்மீக வலுக்களைக் கொண்டுள்ளது, அது கண்டங்கள் தாண்டி செல்வாக்கு செலுத்தியுள்ளது.

தனக்குள் ஏற்படும் முரண்களை சரி செய்யவும் உலகுடன் உறவை நெகிழ்வுள்ளதாக வைத்திருப்பதற்குமான இடைவெளியை இந்தியா கொண்டுள்ளது.

எனவே குறிப்பாக தென்னாசியாவிலோ அதனை அண்டிய பகுதிகளிலோ சா்வாதிகாரம் வன்முறை என்பன பலவீனமடைவதற்கான நிலைமைகளே உள்ளன.

வல்லமை மிக்க ஜனநாயக இந்தியா இலங்கை ஒரு ஜனநாயக நாடாக முழுமையாக மாறுவதில் செல்வாக்கு செலுத்தும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை .இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான உறவுகள் அதனை வலுப்படுத்தும்.

சமகால உலகில் தென்னாபிரிக்காவின் மூத்த தலைவா் நெரிசன் மண்டேலாவில் தெரிவது காந்தியின் சாயல் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவில் செல்வாக்கு செலுத்துவதும் அதுதான் மியன்மாரின் இராணுவ ஆட்சியாளா்களினால் நீண்ட பல வருடங்களாக சிறைவைக்கப்பட்டிருக்கும் ஜனநாயக இயகத்தின் தலைவி அங்ஷாங் சுகியிலும் காந்தியம்தான் செல்வாக்குச் செலுத்துகிறது.

இந்திய சமூக உருவாக்கத்தில் செல்வாக்கு செலுத்திய ஆழுமைகள் எமது பிராந்தியத்தின் பிரகாசமான எதிா்காலத்திற்கும் பங்களிக்கும்.

தற்போதய வன்முறைகள் சா்வாதிகாரங்கள் தற்காலிகமானவை நீண்டதூரம் செல்ல முடியாதவை.

# மாகாணசபையை தொடர்ந்து செயற்பட விட்டிருந்தால் வடக்கு கிழக்கு என இரண்டு மாகாண சபைகள் உருவாகியிருக்காது

**கொக்குவில் பகுதி மக்களுடனான சந்திப்பில் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் தெரிவிப்பு**

வடக்கு கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் கொக்குவில் மற்றும் ஊர்காவற்துறை பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள மக்களைச் சந்தித்து தற்போதைய அரசியல் பொருளாதார சமூக நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

கொக்குவில் கிழக்கு மாஜி சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கருததரங்கு ஒன்றில் கலந்து கொண்ட வரதராஜப்பெருமாள் அங்கு கூடி நின்ற மக்கள் மத்தியில் நீண்ட உரையொன்றினை ஆற்றினார். அரசியல் தீர்வுகள் எட்டப்பட வேண்டிய நேரங்களில் தமிழ் தலைவர்கள் குறிப்பாக புலிகள் தவறவிட்ட சந்தர்ப்பங்களை இதன்போது சுட்டிக்காட்டிய அவர், ஈ.பி.ஆர்.எல்.எவ் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையினை உருவாக்கி அதன் தலைமையகத்தினை திருகோணமலையில் நிறுவிக்காட்டியதையும் குறிப்பிட்டார். அவ்வாறான மாகாணசபை தொடர்ந்து செயற்பட்டிருந்தால் இன்று வடக்கு கிழக்கு என இரண்டு மாகாணசபைகள் உருவாகியிருக்காது எனவும் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகவே போராட்டங்களை ஆரம்பித்ததாக குறிப்பிட்ட அவர் யுத்தம் முடிவடைந்திருந்தாலும் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளுக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை ஆயினும், ஆயுதப் போராட்டம் மூலம் எமது நியாய மான கோரிக்கைகளை பெற்றுவிட முடியாது என்பதை கடந்த கால அனுபவங்கள் மூலம் உணர்ந்துவிட்டோம். எனவே எதிர்காலத்தில் எமது கோரிக்கைகளை மக்கள் திரண்ட ஜனநாயக வழியிலான போராட்டங்கள் மூலம் வென்றெடுக்க எண்ணியுள்ளதாகவும் தெரிவிததார். எனவே ஒரு மாபெரும் மக்கள் இயக்கம் ஒன்றினை கட்டியெழுப்பும் வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


ஊர்காவற்துறை பகுதி மக்களுடனான சந்திப்பில் கட்சியின் மூத்த தலைவர் தோழர் வரதராஜப்பெருமாள் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் ஸ்ரீதரன்

இதனையடுத்து ஊர்காவற்துறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு இன்றுள்ள அரசியல் நிலை எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்ததோடு மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார். இக் கூட்டத்தில் உரையாற்றிய பாடசாலை அதிபர் சண்முகம் ஈபிஆர்எல்எவ் தலைமையில் அமைக்கப்பட்ட மாகாணசபையில் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்தார். இங்குள்ள கிராமங்களில் எண்பதுகளில் சாதிப்பிரச்சினை தலைதூக்கிய வேளை ஈபிஆர்எல்எவ் மட்டுமே அதில் தலையிட்டு தீர்வு கண்ட சம்பவங்களை சுட்டிக்காட்டினார். இங்குள்ள கிராமங்கள் தற்போது வரையில் அபிவிருத்தி காணாத கிராமங்களாக இருந்து வருவதையும் குறிப்பிட்டார். அரசாங்கமும் அதன் அமைச்சர் களும் எமது மக்களுக்கு வீடு கட்டுவதற்கும், கோவில் கட்டுவதற்கும் நிதி உதவி செய்து வருகின்றனர். இவற்றுக்கான தேவைகளிருக்கின்றது தான் ஆனால், தமிழ் மக்களுக்கு இந்த உதவிகள் மட்டும் போதுமானதல்ல. அதற்கு மேலாக எம் மக்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று முக்கியமானது எனக் குறிப்பிட்டார். இதன் அடிப்படையில் எதிர்வரும் காலங்களில் வோட்டுக் கேட்டுவரும் அரசியல் கட்சிகளுடன் மக்கள் பேரம் பேசும் நிலை உருவாகும் எனவும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அ.வரதராஜப்பெருமாள் சுமார் 23 வருடங்களின் பின்னர் இப்பகுதிக்கு தாம் வந்திருப்பதாகவும் இவ்வாறு பல கிராமங்களிலும் மக்களை சந்திக்கின்ற போது மக்கள் தமக்கு வழங்கப்படும் சிறு சலுகைகளோடு மட்டும் திருப்தி கொள்ளாது தமிழர்களின் அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள் தொடர்பாக உணர்வுபூர்வமாக இருப்பது தமக்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகக் குறிப்பிட்டார். “அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் மட்டுமே அரசாங்கத்தின் பணத்தினை செலவளிக்க முடியும் என்னும் உண்மை அனைவரும் அறிந்த ஒன்றாகும். நான் பணத்துடன் உங்கள் முன்வரவில்லை ஆனால் எனது மனச்சாட்சியுடன் உங்களைச் சந்திக்க வந்திருக்கின்றேன்” எனத் தெரிவித்தார். நீங்கள் விரும்பும் கேள்விகளை என்னிடம் கேட்க முடியும். உங்கள் கருத்துக்களை நீங்கள் துணிந்து கூற வேண்டும். அதுவே எனது வருகையை அர்த்தமுள்ளதாக ஆக்கும். நானும் நான் சார்ந்த அமைப்பும் தொடர்ந்தும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்போம். எங்களுடைய கட்சி அரசாங்கம் தரும் சலுகைகளோடு திருப்திப்பட்டு தமிழ் மக்களுக்கான உரிமைகளுக்கு குரல் கொடுக்காமல் இருக்காது. அதேவேளை அரசாங்கம் மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணங்கள், புனர்வாழ்வு உதவிகள் எமது பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் அரசாங்கத்தை ஆக்கபூர்வமாக செயற்பட வைக்க முயற்சிப்போம் எனத் தெரிவித்தார். நாம் ஒரு மக்கள் இயக்கமாக வலுவான அரசியற் சக்தியாக வளர்ச்சியடைய நீங்கள் அனைவரும் எங்களோடு இணைந்து ஒத்துழைக்க வேண்டும் என அங்கு கூடியிருந்த மக்களை தோழர் வரதராஜப்பெருமாள் கேட்டுக்கொண்டார்.

இந்த சந்திப்புக்களின் போது கட்சியின் பொதுச் செயலாளர் ஸ்ரீதரன், யாழ் பிராந்தியச் செயலாளர் மோகன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். யாழ் பிராந்திய கமிட்டி உறுப்பினர் கிருபா கட்சியின் தோழர்கள் சச்சி, முரளி ஆகியோரும் மேற்படி கூட்டங்களில் கலந்து கொணடிருந்தனர்.

---

## அபிமன்யு பதில்கள்

*க.கோபாலகிருஷ்ணன், இங்கிலாந்து*

**பிரபாகரனின் இறப்பிற்குப் பின்னால் புலிகளின் தலைமை என்று உரிமைகோரி சண்டையிடுகிறார்களே யார் பிரபாகரனின் வாரிசு ?**

புலிகள் மத்தியில் பிரபாகரனின் வாரிசு யார் என்பது பற்றி ஒரு “குடுமிபிடிச் சண்டை” இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது!

“புலம்பெயர்ந்த தமிழர்கள் தான் இனி ஈழப்போரை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனக் கடைசியாகப் பேசிய தனது உரையில் பிரபாகரன் கூறியிருக்கிறார், எனவே, நாடு கடந்த தமிழ் ஈழ அரசு ஒன்றினை நிறுவும் நானே பிரபாகரனின் வாரிசு” என்று அமெரிக்காவில் வாழும் உருத்திரகுமார் உரிமை கோருகிறார்.

“தனது இறுதி நாட்களில், தன்னுடன் பிரபாகரன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, இனி புலிகளின் போராளிகளையும் மக்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை என்னிடமே அளித்தார், எனவே நானே பிரபாகரனின் வாரிசு” என்று, அப்பொழுது தாய்லாந் தில் வாழ்ந்த, இப்பொழுது இலங்கை அரசின் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கே.பத்மநாதன் ஒரு நேர்காண லில் உரிமை கோருகிறார்.

“பிரபாகரன் வாழும் காலத்திலேயே அப்பொழுது வெளிநாடுகளில் செயற்பட்ட எவரையும் நம்பாமல், காஸ்ரோ மூலம் என்னையே வெளிநாட்டுப் பிரதிநிதியாக அனுப்பியிருக்கிறார், எனவே நானே பிரபாகரனின் வாரிசு” என்று, நோர்வேயில் வாழும் நெடியவன் உரிமை கோருகிறார்.

“பிரபாகரனின் தமிழ் ஈழக் கனவை அரசியல் ரீதியாக வெளிநாட்டு அரசாங்கங்களுடன் தொடர்பு கொண்டு நனவாக்கும் திறன் நான் தலைமை தாங்கும் அமைப்புக்கே இருக்கிறது, எனவே நானே பிரபாகரனின் வாரிசு” என்று ஜேர்மனியில் வாழும் வணபிதா இமான்யுஎல் உரிமை கோருகிறார்.

“பிரபாகரனைக் கிளிநொச்சியில் நான் நேரடியாகச் சென்று சந்தித்தேன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் அமைப்பை இங்கிலாந்தில் ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்திருக்கிறேன், எனவே நானே பிரபாகரனின் வாரிசு” என்று லண்டனில் வாழும் பாலசுப்பிரமணியம் என்பவர் கூறித் திரிகிறார்.

“பிரபாகரன் இறந்துவிட்டார் என்று கூறுபவர்கள் எல்லாம் எட்டப்பர்கள், விரைவில் அவர் தோன்றி ஆயுதப் போராட்டத்தை மறுபடியும் முன்னெடுக்கப் போகிறார்.” என்று தமிழகத்தில் புலிகளைத் தூக்கிப் பிடிக்கும் தூண்களாக வலம் வரும் வை.கோ, நெடுமாறன், திருமாவளவன் ஆகியோர் கூப்பாடு போடுகிறார்கள்.

“பிரபாகரன் தனக்குப் பின் புலிகளுக்கு எவருமே தலைமை தாங்குவதை விரும்பவில்லை, எனவேதான் போரின் முடிவில் அடுத்த மட்டத் தலைவர்கள் எவரும் தப்பிப் போகாது பார்த்துக் கொண்டார்” என்கிறது இன்னொரு புலித் தரப்பு.

இதற்குள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், “தமிழ்த் தேசியம்”, “தமிழர் தாயகம்” என்று தாம் வெளியே பேசிக் கொண்டிருப்பதனால் தாமே புலிகளின் வாரிசுகள் என்று போர்த்திக் கொண்டு, யார் பிரபாகரனின் வாரிசு என்ற போட்டியை அவர்களுக்குள்ளேயே மறைமுகமாக நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இவர்களில் எவரும், புலிகளின் தலைமைத்துவத்தின் அரசியல் வங்குரோத்தினாலும், பிரபாகரனின் தூர நோக்கற்ற மூர்க்கத்தனத்தினாலும் இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்றைய, சொல்லிமாளாத இழி நிலைகளுக்குப் பொறுப்பேற்கவோ, அல்லது அவற்றிற்கு தங்களது பங்களிப்புகளுக்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்டு ஒதுங்கிக் கொள்ளவோ வக்கில்லாத மனச்சாட்சியற்றவர்களாக நடமாட முடிவது வெட்கக்கேடு?

*சு.தயாபரன் வவுனியா*

**இன்றைய சூழலில், தமிழ் மக்களுக்கு வேண்டியது பொருளாதார அபிவிருத்தியேயன்றி, அரசியல் தீர்வு அல்ல என்று ஒரு நண்பர் வாதாடுகிறார். அது சரியா?**

அவ்வாதம், முற்று முழுதாகச் பிழையானதுமல்ல, முற்று முழுதாகச் சரியானதுமல்ல.

பொருளாதார வளர்ச்சி என்பது, இலங்கையில் வாழும் தமிழர்களது மட்டுமல்ல, வறுமையில் வாடும் மற்றைய முஸ்லிம், சிங்கள இன மக்களதும் மலையக மக்களதும் இன்றைய தேவைதான். அதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், அந்தப் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு, அந்தப் பொருளாதார வளர்ச்சியின் பலாபலன்கள் ஒரு சில ஆளும்வர்க்கத்தைச் சேர்ந்தவர்களிடமும், ஏற்கனவே பணம் படைத்தவர்களிடமும், முதலீடு செய்வதற்கான பண வல்லமையும், சரியான அதிகாரசக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடய வல்லமையும் கொண்டவர்களுமே அனுபவிக்காது, பரவலாக சமூகத்தின் அடித் தளத்திலிருப்பவர்களும் அனுபவிக்குமாறு இருக்க வேண்டுமாயின், அதற்கான அத்தியாவசியமான அடித்தளங்களான அதிகாரப் பரவலாக்கம் கொண்ட கட்டமைப்புகள், சகல இன மக்களிடையேயும், தாம் பாரபட்சமின்றி நடாத்தப்படும் அந் நாட்டின் பிரஜைகள் என்ற உணர்வு, மக்களின் பங்களிப்புகளை ஊக்குவித்து உறுதிப்படுத்தக் கூடியதுமான உண்மையான ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு ஆகியவை நிறுவப்படுதல் வேண்டும். இவையின்றி மேற்கெள்ளும் எந்தப் பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளும் முழுமையான வெற்றியைத் தராது. குறிப்பிட்ட சிலர் பணக்காரர்களாகவும், இன்னும் சிலரை மேலும் பணக்காரர்களாகவும் ஆக்குமே தவிர, பரவலாக நாட்டின் அனைத்து மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாது.

எனவே, அதிகாரப் பரவலாக்கம் கொண்ட போதியளவு நிதிப்பங்கீடு, ஜனநாயக கட்டமைப்புகள், தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் மட்டுமல்ல, முஸ்லிம், சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களிலும் உருவாக்கப்பட்டு மானசீகமாக செயற்படுத்தினால் மட்டுமே உண்மையானதும், நியாயமானதுமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட முடியும். இந்த உண்மை இலங்கையின் சகல இன மக்களாலும், அவர்களது நலன்பற்றி முழங்கும் அரசியல் தலைமைகளாலும் உணரப்பட வேண்டும்.

*சி.சிவகுமார், யாழ்ப்பாணம்*

**சமீபகாலத்தில் ஏதாவது நல்ல திரைப்படங்கள் பார்க்கக் கிடைத்தனவா ?**

திரை அரங்குகளில் பார்க்க சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. சிடிக்களில் சிலவற்றைப் பார்த்தேன். அவை திருட்டு சிடிக்கள் இல்லை எனக் கடைக்காரர் உறுதிப்படுத்தியிருந்தார். அவை தெளிவான பிரதிகளாக இருந்தமை அதன் சான்றாக எடுக்கலாம்.

நான் கடவுள், அங்காடித் தெரு, நாடோடிகள், உன்னைப் போல் ஒருவன், வெண்ணிலா கபடிக் குழு, ஆகியவை சாதாரண மசாலா திரைப்படங்கள் போலல்லாது வித்தியாசமாகவும், ஓரளவு தரமானவையுமான படங்களாவும் கருதினேன்.

மதராஸ பட்டினம், களவாணி ஆகியவையும் பார்க்க வேண்டிய தரமான படங்கள் என அறிகிறேன்.

# இன்னல்கள் இடர்கள் நிறைந்த தமிழர் வாழ்வு சீர்பெற வேண்டும்

## சொந்த நிலங்களுக்கு செல்வதற்காக எமது மக்களில் பலர் இருபது வருடங்களுககு மேலாக அகதி முகாம்களுக்குள் தவமிருக்கின்றார்கள்

சமூக பொருளாதார அபிவிருத்தி என்பது இலட்சிய பூர்வமாக அல்லது ஏட்டுச்சுரைக்காய் தனமாகக் கதைக்கும் விடயமல்ல

இது மக்களின் அன்றாட இன்பதுன்பங்களை புரிந்து கொள்ள முனைவது யதார்த்தமாக அணுகுவதாகும்.

மக்களின் அன்றாட வாழ்வில் நிலவும் ஜீவாதாரப் பிரச்சினைகளை புரிந்துகொள்வது அவற்றிற்கு தீர்வு காண முனைவது ஒரு கடினமான பணியாகும்.

### தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

எமது மக்கள் எத்தகைய பிரச்சினைகளை இப்போது எதிர்நோக்கிக் கொண்டிருகிறார்கள் என்பதை நாம் எளிமைப்படுத்தியதொரு பட்டியலாக்கிப் பார்ப்போமேயானால்:

- இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் தமது சொந்த நிலங்களில் தாம் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த நிலங்களில் மீளக்குடியேற்றப்பட வேண்டும்.
- இது பெரியளவில் நடைபெற்றிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் எஞ்சியிருப்பவர்களும் விரைவில் மீளக்குடியமர வகை செய்யப்பட வேண்டும்.
- வன்னியில் சில இடங்களில் மக்களின் நிலங்கள் இராணுவத் தேவைகளுக்காக சுவீகரிக்கப்படவிருக்கின்றன என்ற பேச்சு இருக்கின்றது. அரசம் அதனை பூரணமாக மறுக்கவில்லை. கணியமான உண்மையிருப்பது தெரிகிறது. இவ்விடயத்தில் அரசு மக்களை அரசின் தவிர்க்க முடியாத தேவைகளைப் புரிந்து கொள்ள வைக்கும் செயற்படாதது ஒரு பெரிய குறைபாடாகும்..
- மீளக்குடியமர்வதற்காக அழைத்துச் செல்லப்பட்ட மக்களிற் பலர் அவர்களின சொந்த நிலங்களில் குடியேற அனுமதிக்கப்படாமல் இடைத்தங்கல் முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது அவர்கள் அனைவரும் அவரது இடங்களில் குடியேற அரசு ஆவன செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.
- பல இடங்களில் மிதிவெடிகள், கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லை இருபத்தைந்து (25) இலட்சம் கண்ணிவெடிகளில் இரண்டரை (2½) இலட்சம் கண்ணிவெடிகளே அகற்றப்பட்டுள்ளன எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் எப்போது இந்த கண்ணிவெடிகளெல்லாம் அகற்றப்படும். எமது மக்கள் எப்போது பயமின்றி நடமாடும் நிலை ஏற்படும். **பிரபாகரன் இருந்தாலும் ஆயிரம் பேர் சாவார்கள் பிரபாகரன் இறந்தாலும் ஆயிரம் பேர் சாவார்கள்** என்பதே கணக்கற்றுக் கிடக்கும் கண்ணி வெடிகளால் விளைந்துள்ள உண்மையாகும்.

### மீளக்குடியமர்த்தல் இழப்புக்களுக்கு ஈடாகாது

பல பின்னடைவுகள் இன்னமும் இருப்பினும் வன்னியிலிருந்து கடந்த ஆண்டின் முற்பகுதியிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை சென்று வவுனியாவிற்கு இடம்பெயர்ந்து சென்ற அல்லது அழைத்துச் செல்லப்பட்ட 3 இலட்சம் பேரில் 25 ஆயிரத்திலிருந்து 35 ஆயிரம் பேர் வரை மட்டுமே இன்னமும் மீளக்குடிர அனுமதிக்கப்படாதவர்களாக இருக்கிறார் அவர்களும் விரைவில் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை ஈடேறும் நாளே அனைவருக்கும் நிம்மதியை தரும் நாளாகும்.

- எல்லாம் இழந்து அகதிகளாகி பஞ்சைப்பரரிகள் எனும் நிலைக்கு ஆளாக்கப்பட்டுப் போன மக்களை வெறுமனே அவர்களின் சொந்த இடங்களில் குடியேற விட்டால் மட்டும் போதுமா? இறுதி யுத்தம் ஆரம்பித்த நாளிலிருந்து 15 – 16 தடைவைக்கு மேல் இடம்பெயர்ந்து சேர்த்து வைத்த எல்லாவற்றையும், பிள்ளை குட்டி உறவுகளையும் இழந்த மக்கள் தமது சமூக பொருளாதார வாழ்வை ஆரம்பிப்பதற்கு அவசியமான அடிப்படை ஆதாரங்கள் வேண்டாமா? இந்த மக்கள் சாதாரணமாக மனிதர்கள் கண்டிராத பெரும் அவலங்களை பார்த்தவர்கள், அனுபவித்தவர்கள், இழப்புக்களை சந்தித்தவர்கள், வாழ்க்கையின் கொடூரமான அனுபவங்களால் தோய்க்கப்பட்டவர்கள்.
- யுத்தத்தால் பல்லாயிரக் கணக்கான பெண்கள் விதவைகளாகிப் போனதால் பெருந்தொகையான பெண்கள் தாம் மாத்திரமே தமது குடும்பங்களுக்குத் தலைமை தாங்கி குடும்ப பாரம் முழுவதையும் சுமக்க வேண்டிய கட்டாய நிலைமைக்கு உள்ளளாக்கப்பட்டிருக்கிறார்கள்
- யுத்தத்தின் மத்தியில் அப்பாவிகளாக இருந்தும் ஊனமுற்றவர்கள், ஒருவர் அல்லது பெற்றோரில் இருவரையுமே இழந்த பிள்ளைகள், பலாத்காரமாக யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டதால் இறந்தவர்கள் அங்கவீனமாகி போன எஞ்சியவர்கள் எனப் பலதிறத்தார் உள்ளனர்.
- சிறப்பு முகாங்களில் உள்ள தமது பிள்ளைகள் பற்றிய கவலைகளுடன் வாழும் பெற்றோர்கள் பல்லாயிரம்.. சிறையிலுள்ள 13 ஆயிரம் பேரில் சில நூற்றுக்கணக்கானோரைத் தவிர மிகுதிப் பேர் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புவார்கள் என அரசு கூறுகிறது. அதற்கு வகையாக அவர்களுக்கு அரசாங்கம் தொழிற்பயிற்சிகளையும் வழங்குகிறது. இருப்பினும் தமது பிள்ளைகளுக்கு விடுதலை எப்போது கிக்கும் என்று தெரியாமல் நாளாந்தம் தவிக்கிறாகள் பெற்றோர்கள். தமது பிள்ளைகள் தம்முடன் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது பெற்றோரின் பெரு விருப்பமாகும் இது இயல்பான ஏக்கமும் ஆகும்.
- இவ்வாறாக சிறப்பு முகாம்களில் இருப்பவர்கள் பலர் அவரது குடும்பத்துக்கு உழைத்துக் கொடுக்க வேண்டியவர்கள். புலிகள் இருந்த காலத்தில் அலர்களது குடும்பங்களுக்கு பிரச்சினை இருக்கவில்லை. ஏனெனி உரிய சம்பளத்தை புலி வழங்கியது. ஆளால் இப்பேகாது அந்தக் குடும்பங்கள் நடுத் தெருவில் வருமானம் எதுவுமின்றி வறுமையில் வாடி நிற்கின்றன. எனவே அரசாங்கம் இவ்வாறு பாதிக்கப்பட்டு நிற்கும் குடும்பங்களுக்கு அடிப'படையான உதவிகளை வழங்குவது அவசியமாகும்.
- யுத்தம் முடிந்துபோன கதையாகிவிட்ட நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படுதல் அல்லது வழக்கொழிந்து போதல் என்பதும் எதிர்பார்க்கப்பட வேண்டியதே படிப்படியாக அது நிகழிலும் அது துரிதப்படுத்தப்பட வேண்டும்

**-நயினை அம்மான்-**

- சொந்த நிலங்களுக்கு செல்வதற்காக எமது மக்களில் பலர் இருபது வருடங்களுக்கு மேலாக அகதி முகாங்களுக்குள் தவமிருக்கின்றார்கள்.
- மக்களின் மனக்காயங்கள் ஆற்றப்படவேண்டும். அது அரசின் தலையாய கடமை.

> *யாரிலாவது தங்கி நிற்றல் அல்லது இலவசமாக அரசு பங்கிட்டு வழங்கும் அத்தியாவசியப் பொருட்களில் வயிற்றைக் கழுவி வாழ்தல் என்னும் நெருக்கடி கால வாழ்க்கை முறைமை எமது மக்களுக்கு இனிமேல் வேண்டாம். எமது மக்கள் தமது சுய உழைப்பால் உயரக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள் சுயமரியாதையோடு வாழும் விருப்பம் கொண்டவர்கள். அந்த நிலைக்கான அடித்தளங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.*

யுத்தத்தினாலும் சுனாமியாலும் பாரியளவில் இழப்புக்களை சந்தித்தவர்கள் பெரும்பாலும் கரையோர மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்களே என்பது கவனத்திற் கொள்ள்ப்பட்டு மீனவர்களின் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்துக்குமான திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்

- கடற்றொழிலில் தற்போது 40 குதிரை வலு வெளியிணைப்பு இயந்திரங்களை பயன்படுத்துவதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கடலிலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் காணப்படுகின்றன மீனவர்கள் பாரியளவில் மீன்பிடித்தொழிலை நவீன முறையில் முன்னெடுத்துச் சென்ற முன்னேறுவதற்கான ஏற்பாடுகள் வேண்டும்
- கடற்கரையை அண்டிய பகுதிகளில் தகுந்த பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்படவேண்டும் மீனவர்கள் வாழும் இடங்கள் சன நெருக்கடி கொண்டவையாக இருப்பது இங்கே வழமையாகியுள்ளது. இதனால் பல சுகாதாரப் பிரச்சினைகளும் பெருகியுள்ளது. இதற்கு ஒரு உரிய மாற்றம் வேண்டும்.
- எவ்வளவு மீன் கடல் திரவியங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றது என பார்கின்ற அதேவேளை மீனவர்களின் வாழ்க்கை எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்றும் பார்க்கப்பட வேண்டும்.

### வன்முறையற்ற பாதையின் திறவுகோல்

திரும்பவும் வன்முறைகள் தலைதூக்கக்கூடாது என்ற அரசின் எச்சரிக்கை உணர்வை நாம் ஒரேயடியாக அலட்சியம் செய்ய முடியாது

ஆனால் பரஸ்பர நம்பிக்கையுடன் சுதந்திரமாக வாழ்வதற்குரிய நிலைமைகளை ஊக்கப்படுத்துவதிலும் அதற்குரிய அடித்தளங்களைக் கட்டியெழுப்புவதிலுமே வன்முறையற்ற உலகை நோக்கிப் பிரவேசிப்பதற்கான கதவுகளைத் திறக்க முடியும்

சிறந்த தொழில் சிறந்த கல்விக்கான வழிவகைகள் கண்டறியப்பட்டாலே சமூக பொருளாதார ரீதியான பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டும்

பாரபட்சங்கள் அநீதிகள் நிலவும் சமூகங்களிலும் நாடுகளிலும் கலகங்கள் வெடிக்கின்றன பல சந்தர்ப்பங்களில் இத்தகைய கலகங்கள் தார்மீக நெறிமுறைகளை மீறி அநீதியானவையாகவும், கொடூரமானதாகவும், மக்களின் உயிர்களை பற்றி கிஞ்சிற்றும் கருணை கொள்ளாதவையாகவும் மாறிவிடுகின்றன.

எனவேதான் நாடாளாவிய சமத்துவத்தை நிலை நாட்டும் வகையாகவும் பாரபட்சங்கள் மற்றும் அநீதிகளைக் களையும் வகையாகவும் அபிவிருத்தி நடவடிக்கைகள் அமைய வேண்டும். குறிப்பாக தமிழர்களும் முஸ்லீம்களும் மலையகத் தமிழ் மக்களும் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளில் பாரபட்சங்கள் புறக்கணிப்புகள் இருப்பதாக உணர்கின்றார்கள்

இப்படியான உணர்வுகள் சந்தேகங்கள் எதுவும் இல்லை என்று அரசாங்கத்தின் தலைவர்கள் தமக்குள் திருப்திப்பட்டுக் கொள்வது உண்மையைப் புரிந்து கொள்ள வழிவகுக்காது. மாறாக சிறுபான்மைத் தேசிய இன மக்கள் மத்தியில் உண்மையில் நிலவுகின்ற அவ்வாறான உணர்வுகளை சந்தேகங்களை நீங்குவதற்கு ஏதுவாக காரியங்கள் நடைபெறவேண்டும்

### இந்தியா மற்றும் உலகநாடுகளின் நேசக்கரம்

சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தருவதாக இந்தியா உறுதியளித்திருக்கின்றது. இதற்காக 500 கோடி ரூபாய் பெறுமதியான உதவிகளை இந்தியா இம்மக்களுக்கு வழங்கும் நடவடிக்கைகளைத் தொடங்கியிருக்கிறது.

உணவு, உடை மருத்துவம் தற்காலிக கூடாரங்கள் அமைப்பதற்கான கூரைத் தகடுகள், விவசாயிகளுக்கான விதைப் பொருட்கள் போக்குவரத்து வீதிகளை செப்பனிடல். மிதிகண்ணிவெடிகளை அகற்றுதல் ஆகியவற்றிற்கு பலவகையிலும் உதவி வருகிறது.

ஐ.நா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், சீனா போன்ற நாடுகளும் எமது மக்களுக்கு உதவியளித்துக் கொண்டிருக்கின்றன.

பல்வேறு சீர் குலைவுகள், நிர்வாகக் குறைபாடுகளுக்கு மத்தியிலும் மக்களுக்கு உதவிகள் கிடைப்பதற்கு இலங்கை அரசாங்கம் வழிவகைகளைச் செய்து கொண்டிருப்பதை நாம் மறந்து விட அல்லது மறைத்துவிட முடியாது.

கிழக்கின் உதயம், வடக்கின் வசந்தம் ஆகிய செயலணிக் குழுக்களின் கீழ் பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டி ருக்கின்றன.

அகல வீதிகள் பாலங்கள் பாடசாலைகள் என்பனவும் இதில் அடங்கும்

கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகளில் சர்வதேச சமூகம் இந்தியா மற்றும் இலங்கையின் ஊழியர்கள் படையினர் செயற்படுகின்றார்கள்

தண்ணீரை சுத்திகரிக்கும் வேலையில் ஐ.ஓ.எம் போன்ற சர்வதேச ஸ்தாபனங்கள் ஈடுபடுகின்றன.

எனினும் மக்கள் கட்டாந்தரைப படுக்கை, மலசல கூடமின்மை, விச ஜந்துக்களால் ஆபத்து என பல பிரச்சினை களை எதிர்நோக்குகின்றார்கள் அவர்களின் பாதுகாப்பு தொடர்பான நியாயமான விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டு உரிய தீர்வை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

மரணங்கள் மலிந்திருந்த பூமியில் இப்போது மக்கள் மீண்டும் தமது சுயசார்பு வாழ்க்கையை ஆரம்பிக்க கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் இதனை நாம் மனதில் இருத்தியேயாக வேண்டும்

### கல்விமான்களின் பங்களிப்பு

இங்கு மக்கள் மத்தியில் அவர்களின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையினை கட்டியெழுப்புவதுவும் பாதுகாப்பான வாழ்வை உத்தரவாதப்படுத்துவதுவும் அவசரமான அவசியங்களாகும்.

இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை சுவாமிநாதன் யுத்தத்தின் கொடூரத்தை தரிசித்த வன்னி மக்களின் வாழ்வை ஆற்றுப்படுத்துவதற்கு தயாராகவுள்ளார்.

கடல், நில வளங்களைப் பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் என ஆய்வுகள் விரிவாக மேற்கொள்ளப்பட வேண்டும் கலாநிதி முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தா, பேராசிரியர் ஆறுமுகம் பேராசிரியர் ரட்ண ஜீவன் கூல், பொறியியலாளர் சூரியசேகரம் போன்றவர்கள் வடக்கின் பொருளாதார வளர்ச்சி கல்வி வளர்ச்சி நீர் நிலை பாதுகாப்பு விடயங்களில் கரிசனை கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள். யாழ்ப்பாண மற்றும் கிழக்கு பல்கலைக் கழகங்களை மையமாகக் கொண்டு வடக்கு கிழக்கின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு வழிகாட்டும் ஆக்கபூர்வமான ஆராய்ச்சிகளில் தமிழ் அறிஞர்கள் கணிசமாக அக்கறையுடன் ஈடுபாடு காட்ட வேண்டும்.

### சுய சம்பாத்தியத்திற்கான வழி அவசியம்

யாரிலாவது தங்கி நிற்றல் அல்லது இலவசமாக அரசு பங்கிட்டு வழங்கும் அத்தியாவசியப் பொருட்களில் வயிற்றைக் கழுவி வாழுதல் என்னும் நெருக்கடி கால வாழ்க்கை முறைமை எமது மக்களுக்கு இனிமேல் வேண்டாம். எமது மக்கள் தமது சுய உழைப்பால் உயரக் கூடிய ஆற்றல் படைத்தவர்கள், சுயமரியாதையோடு வாழும் விருப்பம் கொண்டவர்கள். அந்த நிலைக்கான அடித் தளங்கள் வழங்கப்பட வேண்டும்.

# ஆவோமா ஆசியாவின் அதிசயமாக?

**புலிகள் பேரினவாத அரசயந்திரத்தின் மீது என்னதான் வலிமை மிகுந்த தாக்குதல்களைத் தொடுத்தாலும் அவர்களின் போராட்டம் எந்தக் கட்டத்திலும் தார்மீக வலிமை கொண்டதாக இருக்கவில்லை**

18வது அரசியல் யாப்புத் திருத்தம் அதிகாரத்தினை மையமாக்குவது அல்லது நிலமானிய சமூகத்தின் சாயலுடனான அரசாட்சியைக் கொண்டு வருவது இலங்கையின் பாரம்பரியமான ஜனநாயகத்திற்கும் இலங்கை அடையவேண்டிய ஜனநாயக இலக்குகளுக்கும் பாதகமானதென்ற அபிப்பிராயம் பரவலாக கல்வியாளர்களாலும் ஊடகங்களாலும் இராஜதந்திரிகளாலும் அரசசார்பற்ற நிறுவனங்களாலும் அரசியல் கட்சித் தலைவர்களினாலும் சொல்லப்பட்டு வருகின்றது.

இன்னொரு தேசிய சமூகத்தை ஒடுக்கும் தேசியம் தான் மட்டும் சுதந்திரமாக இருக்க முடியாது என்ற கூற்றுகள் இங்கு வெளிச்சமாகிறதோ என்ற ஐயப்பாடு இங்கே அதிகமாகி வருவது தெரிகிறது.

போரில் வெற்றி என்பது வென்றவர்களின் நியாயங்களை தோற்ற சமூகங்கள் மீது திணிப்பது என்ற போக்கும் அதற்காக அரசு இயந்திரத்தின் பாகங்கள் அனைத்தையும் பயன்படுத்துவதென்ற போக்கும் பெரும்பான்மை சமூக மக்களின் அடிப்படை உரிமைகளையும் கபளீகரம் செய்துவிடும் என்ற இயக்கவியல் யதார்த்தம் பற்றிய அச்சம் இங்கே அதிகமாகி வருகிறது.

இதனை ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் இனப்பிரச்சினைக்கு இதய பூர்வமாக அனைவரும் அனைத்துச் சமூகங்களும் ஒருங்கிணைந்து தீர்வு காணாமல் இந்த நாட்டில் ஜனநாயகத்தை ஸதிரமாக ஸ்தாபிக்க முடியாது இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பதே நாட்டை தீவிர ஜனநாயகப்படுத்துவதற்கான முதற்படியாகும்

இதனைச்செய்யாமல் இலங்கையை சிங்கப்பூர் ஆக்குவதோ அல்லது ஆசியாவின் அதிசயமாக்குவதோ கனவாகத்தான் இருக்கும்.

## நல்லெண்ணம் கொண்ட இடதுசாரிகளும் நஞ்சை விதைத்த இனவாதிகளும்

அதிகாரப்பகிர்வு நிகழ்வதற்கு என்ன செய்ய வேண்டும்? வெவ்வேறு கால கட்டங்களில் முற்போக்கான சிங்களத் தலைவர்கள் சிறுபான்மை சமூகங்களுக்கு உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதை வலியுறுத்தியுள்ளாகள்.

குறிப்பாக இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் மலையகத் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் மலேரியா நோய் ஒழிப்பு விழிப்புணர்ச்சி இயக்கத்தை முன்னெடுத்திருக்கிறார்கள். இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை பிரஜா உரிமை பறிக்கப்பட்டபோது அதற்கு எதிராக குரல் கொடுத்தார்கள்.

1956ல் தனிச்சிங்களச்சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் சரி தமிழ்த்தலைவர்கள் காலிமுகத திடலில் தாக்கப்பட்டபோதும் சரி அவர்கள் குரல் கொடுத்தார்கள். 1940 இன் பிற்பகுதி, 1950 இன் நடுப்பகுதியின் பின்னர் இடதுசாரிகளுக்கு வீழ்ச்சி ஏற்பட்டதும் இந்த நாட்டில் இனவாதம் தலைதூக்கியது. இனவாதிகளின் கை ஓங்கியது இனவாத அரசியல் இந்த நாட்டில் மக்கள் மத்தியில் சந்தேகங்களையும் வெறுப்புகளையும் வளர்த்தது. அடுத்தடுத்து இனவாதரீதியான கலவரங்களுக்கும் படுகொலைகளுக்கும் வழிவகுத்தது. 30 ஆண.டு காலமாக இரத்த ஆறு ஓடும் யுத்ததுக்கு அடி கோலியது.

இதன் விளைவாக இந்த நாட்டில் அனைத்து இன சமூகங்களின் மத்தியிலும் பாரபட்சங்களைக் களைதல் ஏற்றத் தாழ்வான சமூக அமைப்பை நீக்குதல் பல்லினங்களின் தேசமாக இலங்கையை மாற்றுதல் ஆகிய சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டன

ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டின் அடிப்படையில் தேசிய முதலாளித்துவ சக்திகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட அரசியல் தளத்தில் கரங்கோர்த்தமை சிறுபான்மை சமூகங்கள் தொடர்பான இடதுசாரிகளின் நிலைப்பாட்டிலும் செயற்பாட்டிலும் பாதிப்பை ஏற்படுத்தியது.

1960 இன் நடுப்பகுதியில் நிகழ்ந்த தோசை மசாலவடை ஊர்வலம், 1972 அரசியல் யாப்பானது ஏற்கனவே இருந்த அரசியல் யாப்பில் சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பிற்கென இருந்த பிரிவுகளையும் நீக்கிவிட்டது. அது பல மதங்கள் பல கலாச்சாரங்கள் கொண்ட இந்த நாட்டில் புத்த மதத்தை மட்டும் அரச மதமாக்கியது. நெகிழ்வுத் தனமாக இருந்த அரசியல் அமைப்பு முறைக்குப் பதிலாக ஒற்றையாட்சி என்னும் அமைப்பு முறைக்குள் இலங்கையை இறுக்கமாகப் புதைத்தது.. இவை இன்றைக்கும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கான இறுக்கங்களாக உள்ளன. இவ்வாறான போக்குகளால் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்திய குரல்கள் அதன் பின்னர் படிப்படியாக பலவீனமடைந்தன

1977 பொதுத்தேர்தலில் பொதுஜன முன்னணியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் இடதுசாரி உறுப்பினர் ஒருவர் மாத்திரமே பிரதிநிதிதுவம் வகித்தார். திரு.டியூ குணசேகரா, சரத்முத்தட்டுவேகம ஆகியோர் 1980 களின் முன்பகுதி வரை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பை ஆற்றியிருக்கின்றார்கள்.

## அரசியல் தலைவர்களின் தவறும் ஆயுத எழுச்சியின் பிரசவமும்

தமிழ்த்தரப்பிலும் ஒரு நியாயமான நீதியான அரசியல் இருந்தது என்று கூறிவிட முடியாது

ஆனால், தொடர்ச்சியான ஏமாற்றமும் விரக்தியும் அதிகாரப்பகிர்வின் சாத்தியப்பாடு பற்றிய நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தின.

குறுகிய காலத்தில் அடுத்தடுத்து நடந்த இனக் கலவரங்களும் இந்த நாட்டில் இனங்கள் சேர்ந்து வாழ்வதற்கான நம்பிக்கையினை ஏற்படுத்தவில்லை பிரிவினைதான் வழி என்ற நிலையினை ஏற்படுத்தியது.

தமிழ்த் தலைவர்கள் வன்முறையற்றரீதியில் நடாத்திய போராட்டங்களை அரசாங்கம் கருத்திலெடுக்காமல் அடக்கி ஒடுக்குவதிலே அக்கறை காட்டியது. மிதவாத தமிழ்த் தலைவர்கள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் எதுவும் சாதிக்காததால் அரசியலில் ஆயுதப்போராட்டம் மீது நம்பிக்கை கொண்டவர்கள் தாமாகத் தலைதூக்கும் நிலைமை ஏற்பட்டது..

இந்திய சுதந்திர இயக்கத்தில் காந்தி அடிகளின் அகிம்சை இயக்கம் பரந்த செல்வாக்கை செலுத்தினாலும் கடும்போக்கான தீவிரவாத செயற்பாடுகளும் இருந்தன அங்கு அகிம்சையே நிர்ணயகரமாக இருந்த போதிலும் தீவிரவாதமும் கலந்தே இருந்தது. தமிழ் தலைவர்களின் நிதானமின்மையும் பேரினவாதத்தின் ஈவிரக்கமற்ற தன்மையும் இங்கு ஆயுதம் தாங்கிய இயக்கத்தின் பிரவசத்திற்குக் காரணமாய் அமைந்தன

## புலிகளின் தீவிரவாதமும் கூடிப்பிறந்த ஜனநாயக மறுப்பும்

தமிழர்களின் மத்தியில் ஆயுத இயக்கத்தின் உருவாக்கத்துடன் ஜனநாயக மறுப்பும் கூடவே பிறந்தது புலிகள் ஒரு பாசிச இயக்கமாக எழுச்சி பெற்றனர். சகோதர தமிழ் இயக்கங்கள் மீதும் தமிழ் அரசியல் மற்றும் சமூக தலைவர்கள் மீதும் தமிழ் இயக்கங்களின் தலைவர்கள் மீதும் நிராயுதபாணியான ஜனநாயக அரசியல்வாதிகள் மீதும் சகோதர சமூகங்கள் மீதும் சிங்களத் தலைவர்கள் மீதும் எமக்கு ஒதுங்க .இடம் கொடுத்த எமது அயல்நாட்டின் தலைவர்கள் மீதும் ஈவிரக்கமற்ற தாக்குதல்களை ஆரம்பித்து முடிவில்லாது இடையறாது படுகொலைகளை அரங்கேற்றினார்கள்

புலிகள் பேரினவாத அரசயந்திரத்தின் மீது என்னதான் வலிமை மிகுந்த தாக்குதலைத் தொடுத்தாலும் அவர்களின் போராட்டம் எந்தக் கட்டத்திலும் தார்மீக வலிமை கொண்டதாக இருக்கவில்லை.

## இனங்களுக்கிடையே புரிதலும் ஆட்சி அதிகாரத்தில் பங்கும்

சிதிலமாகி, கந்தலாகி, கற்பனைக்கும் எட்டாத இழப்புகளை சந்தித்த எம் மக்களின் வாழ்க்கை மீள சீராக கட்டியெழுப்பப்பட வேண்டும்

தமிழர்களின் இழந்த வாழ்வை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமானால் தமிழர்களுக்கிடையிலும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகள் - சிறுபான்மை சமூகங்களுக்கு இடையிலும் பரந்தளவிலான புரிதல் ஏற்படுதல் வேண்டும் .

தமிழ் ஜனநாயக சக்திகள் இலங்கையின் ஆட்சி முறையில் பங்குதாரர்கள் ஆகுவதற்கான நீதியான கோரிக்கைகள் வேண்டும், அவை நியாயமான முறையில் கோரப்பட வேண்டும், அவற்றை யதார்த்தமாக அடையும் வழிகளைக் கண்டறிந்து செயற்படவேண்டும்.

---

# யுத்தம் ஓய்ந்த பின்னும் தொடரும் ..

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

## புலிகள் தொடர்பான படிப்பினை

புலிகள் தொடர்பாக இடத்துக்கு இடம் மனப்போக்குகள் வேறுபடுகின்றன. வன்னிப் பகுதியில் யுத்தத்தின் கடைசி நாட்களில் விடுதலைப் புலிகள் நடந்து கொண்ட முறையையிட்டு மக்கள் மிகவும் சீற்றமடைந்துள்ளார்கள். எவ்வாறாயினும் அதன் காரணமாக புலிகளை தோற்கடித்த அரசாங்கத்தின் மீது மக்கள் அபிமானம் கொண்டிருக்கிறார்கள் என்றில்லை.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை பற்றியல்ல அரசாங்கம் என்ன செய்கிறது என்பதில் அதிக அக்கறையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஏனெனில் யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் முற்று முழுதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சியின் கடுந்தாக்கத்தை அனுபவித்தவர்களல்ல. வன்னிப் பகுதியில் வசித்தவர்கள் இப்போது யாழ்ப்பாணம் வந்த பின்னர் யுத்தத்தின் கடைசி நாட்களில் தாங்கள் அனுபவித்த அவலமான துயரங்களை யாழ் மக்களிடம் சொல்லிவருவதன் காரணமாக என்ன நடந்தது என்பதை அவர்களும் இப்போது அறிந்திருக்கிறார்கள். எனவே அடிப்படையில் வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றிய நிறைவான எண்ணங்கள் எதுவுமில்லை. ஆனால், அரசாங்கம் வடக்கில் உள்ள மக்களின் மனங்களில் சுயமதிப்பையும், சுயநம்பிக்கையையும் ஏற்படுத்த நிறையச் செய்ய வேண்டியுள்ளது. இன்று வடக்கிலும் கிழக்கிலும் அநேகமாக ஒருவகை இராணுவ ஆட்சி முறையே நடக்கிறது. சிவில் நிர்வாகம் அல்ல என்ற அபிப்பிராயமே நிலவுகின்றது

## மக்களின் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்யாத கூட்டமைப்பு

யுத்தம் முடிவடைந்து ஒருவருடத்திற்கும் குறைவான காலப்பகுதியில், மக்கள் பயத்துடனும் பலவித இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டுமிருந்த வேளையில் பாராளுமன்றத தேர்தல் நடைபெற்றது அப்போது தாங்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் ராஜபக்ஸவே காரணம் என குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் நினைத்தார்கள். பல மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தங்களுக்கு பயனற்ற ஒன்று என்ற கருத்து மேலெழத் தொடங்கியுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் தங்களுக்கு எதையும் பெற்றுத்தர முடியாது என அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், இது அரசாங்கம் தங்களுக்கு எல்லாவற்றையும் செய்து விடும் என்று அவர்கள் திருப்திப்படுகிறார்கள் என்று அர்த்தமாகாது. ஏனெனில் அவர்கள் அரசாங்கத்தின் மீது பலத்த சந்தேகம் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்க எதிர்ப்பு எண்ண அலைகள்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு உதவி செய்கிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியலில் உயிர் வாழ்வதற்கு இந்த அரசாங்கமே மறைமுகமாக உதவி புரிகிறது.

அரசாங்கம் தமிழ் மக்களிடையே சந்தேகம் தோன்றக் கூடிய வகையில் நடந்து கொள்ளுமாயின் அது தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற சக்திகளுக்கே பயன் தரக்கூடியதாக இருக்கும். அரசாங்கம் மட்டுமல்ல சிஙகளத் தலைவர்கள் இந்த நாட்டின் பன்மைத் தன்மையினை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஸ்ரீ லங்காவில் தாஙகள் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழ முடியும் என தமிழ் மக்கள் நம்ப வேண்டும்.

## அரசாங்கத்திற்கு எதிரான உணர்வுகளுக்கு அடிப்படை

1. உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களில், யுத்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து புலிகள் மேற்கொண்ட பிரச்சாரம், அதற்காக அவர்கள் கையாண்ட உத்திகள்.

2. இராணுவம் முழுமையாக சிங்கள இராணுவம். காவல்துறையும் சிங்களக் காவல்துறையே. பொது சேவைகள், அரச சேவைகள் யாவற்றிலும் சிங்களமே ஆட்சி புரிகிறது.

கள நிலமைகளில் இராணுவம் மோசமாக நடந்து கொள்வதாக நான் கருதவில்லை. மக்களுடனான அவர்களின் பழகும் விதமும் நன்றாகவே உள்ளது. தனிப்பட்ட ரீதியில் மக்கள் இராணுவததினரோடு எந்தவித கசப்புணர்வையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் பொதுமக்களிடையே காணப்படும் அதிகமான இராணுவ பிரசன்னம் மக்களிடையே ஒரு அரச எதிர்ப்புணர்வைத் தோற்றுவிக்கிறது. எனவே அரசாங்கம் பொது மக்களிடையே காணப்படும் அதிகமான இராணுவ பிரசன்னத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். தமிழ் பிரதேசங்களை தமிழ்த் தலைவர்களே நிர்வகிப்பதற்கான வழிவகைகளை செய்ய வேண்டும்.

அரசாங்கம் பலவகையான பிரச்சாரங்களை மேற்கெண்டபோதும் கூட இராணுவத்திலோ அல்லது காவல்துறையிலோ தமிழர்களைச் சேர்ப்பதற்கான இதயபூர்வமான முயற்சிகள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை. யுத்தம் முடிவடைந்த காலப் பகுதியில் இதற்கான சில முயற்சிகள் நடைபெற்றிருந்தாலும் கூட இது இன்னமும் விரிவான முறையில் நடைமுறைப் படுத்தப் படவேண்டும். கடந்த முறை அரசாங்கம் யாழப்பாணத்தில் 400 பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டி ஆட்சேர்ப்பு நடத்தியபோது 6000 இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவையில் சேருவதற்கு முன்வந்திருந்தனர். எனவே தமிழர்கள் அரச படைகளில் மற்றும் பொலிஸ் சேவைகளில் போதியளவு இணைவதற்கு தயாராக இல்லை என்பது சரியல்ல.

## சிங்களத் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டியவை

வடக்கு கிழக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்ட நாங்கள் தொடர்ச்சியாகப் பாடுபட்டு வருகிறோம். ஆனால், இன்னமும் இந்த இடங்களில் ஜனநாயகச் சூழல் திருப்திகரமாக ஏற்பட்டு விட்டதாக நான் நினைக்கவில்லை. அரசபடையினருக்கும், அரகாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் சிலருக்குப் பயந்தே இன்னமும் மக்கள் வாழ்கிறார்கள்.. ஜனநாயகம் மீள்நிலைப் படுத்தப்பட வேண்டும் என அரசாங்கம் விரும்பினால் சகல சக்திகளுடனும் கூட்டாகச் செயற்பட வேண்டும்.

மேலும், அரசாங்கத்திலுள்ள சிலர் இந்த நாட்டில் இரண்டு கட்சிகள் - பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி - மட்டுமே உள்ளன எனத் தவறாக நினைக்கிறார்கள். அந்த எண்ணத்தினால்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இங்கு பலம் பெற்றிருக்கிறது. இந்தியாவில் ஆரம்பத்தில் பிராந்தியக் கட்சிகள் முன்னணிக்கு வந்தபோது பிராந்திய பிரிவினை பற்றிய விவாதங்கள் எழுந்தன. .ஆனால் பிராந்தியக் கட்சிகள் அரச ஆட்சியமைப்பில் பங்குதார்களாக ஆகியதுடன் பிரதான தேசியக் கட்சிகளுடன் கூட்டமைத்து செயற்படும் நிலைமைகள் ஏற்பட்டதால் அங்கு பிரிவினை எண்ணம் இல்லாமல் போய் ஒரு தேசத்தவர் என்ற நிலை வளர்ச்சியடைந்தது. அத்துடன் தேசியக் கட்சிகளுககும் பிராந்தியக் கட்சிகளுக்கும் இடையில் ஒரு ஒருமைப்பாடும் வளர்ச்சியடைந்தது. இவ்வாறான ஒரு வளர்ச்சி இங்கு சரியான அரசியல் நாகரீக வளர்ச்சியிலேயே சாத்தியமாகும் அதிகாரப்பகிர்வும் பிராந்தியக் கட்சிகளின் ஆரோக்கியமான செயற்பாடுகளும் இலங்கையின் தேசியத்தை கட்டியெழுப்ப உதவியாகவே இருக்கும்.

சிங்களத் தலைவர்களிடையே கூட்டு ஒன்றிணைப்பு விருத்தியாகிறது. அந்த முறை இங்கும் பிரயோகிக்கப்பட வேண்டும்.

சிங்களத் தலைவர்களிடையே அதிகாரப் பரவலை நடைமுறைப் படுத்தினால் நாட்டில் பிரிவினை ஏற்பட்டு விடுமென்கிற ஒரு உணர்வு காணப்படுகிறது.அது தவறான கணிப்பு.

## 13 வதும் 18 வதும்

13 வது திருத்தம் மூலம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட சில அதிகாரங்களை 18வது திருததம் குறைத்திருப்பது மிகவும் கவலைக்குரிய தொன்றாகும் இதுபற்றிச் சொல்வதற்காக நான் வருத்தப்படுகின்றேன். 13வது திருத்தம் மூலம் மாகாணசபைகள் மிகவும் குறைந்தபட்ச அதிகாரங்களையே கொண்டிருந்தன. இப்போது அதிலும் சில முக்கியமான பகுதிகள் குறைக்கப் பட்டுவிட்டது. மாகாணசபைகள் ஓரளவிற்கு வேலைவாய்ப்பை வழங்கக் கூடியனவாக இருந்தன. ஆனால், மாகாண பொதுசேவைகள் ஆணைக் குழுவை ஜனாதிபதியின் கீழ் கொண்டுவந்ததன் மூலம் அந்த அதிகாரம் பறிக்கப்பட்டு விட்டது. மாகாண காவற்துறை ஆணைக் குழுவினையும் மத்திய அரசு எடுத்துக்கொண்டு விட்டது.

# ஏன் வேண்டும் தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமை

**இலங்கைத் தமிழ் மக்களின் பொது நன்மைகள் அரசியல் பொருளாதார முன்னேற்றங்கள் என்ற அடிப்படையில் நோக்கினால் தமிழர்களின் அரசியல் கட்சிகள் தமிழர்களின் நன்மைகள் குறித்த விடயங்கள் தொடர்பாக தமக்கிடையில் ஒருமித்த கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும்**

"தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமைப்பட்டு செயற்பட வேண்டும்", "தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை வேண்டும்." ஒற்றுமை பற்றி இலங்கை வாழ் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக இவ்வாறான கருத்துக்களும் விருப்பங்களும் நிலவுகின்றன என்பது அனைவரும் அறிந்ததே.

இது வெறுமனே அபிப்பிராயம் சம்பந்தப்பட்ட விடயமோ அல்லது விருப்பங்கள் சம்பந்தப்பட்ட விடயமோ அல்ல உண்மையில் மக்களின் இன்றைய அடிப்படைத் தேவைகளிலிருந்து எழுகின்ற அவசியம் தொடர்பான விடயமே.

இருபது வருட கால தொடர்ச்சியான யுத்த நெருக்கடிகள் நிறைந்த சூழ்நிலையினால் இலங்கையின் தமிழ்ச்சமூகம் சின்னாபின்னமாகிப் போய்விட்டது. தமிழர்களின் சிறந்த தலைவர்கள் எல்லாம் பெரும்பாலும் கொல்லப்பட்டு விட்டார்கள் - பலர் இயற்கையாகவும் மரணித்துப் போய்விட்டார்கள். பத்து லட்சத்துக்கும் மேல் தமிழர்கள் அகதிகளாகவோ வேறு வகையாகவோ புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழுகிறார்கள்.

### தமிழ் மக்களின் ஏக்கம் தலைவர்களின் போக்கு

1990ம் ஆண்டிலிருந்து உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சுமார் ஒரு இலட்சம் தமிழர்கள் இராணுவத்தினால் இடம்பெயர்க்கப்பட்டு கடந்த 20 ஆண்டுகளாக அரசிடம் கையேந்தி வாழ்பவர்களாக ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். வடமாகாணத்தில் தமிழ்பிரதிநிதிகளோ இந்த மக்களின் எதிர்கால வாழ் நிலை தொடர்பாக எதுவும் செய்ய முடியாமல் எந்த வாக்குறுதியையும் வழங்காமல் கையறுந்த நிலையிலேயே இருக்கின்றார்கள். இந்த அகதிகளின் அவல நிலையைப் பயன்படுத்தி வாக்கு வேட்டை ஆடுவதில் மட்டுமே அக்கறையாக இருக்கின்றார்கள்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் வன்னியில் வாழ்ந்த மூன்று இலட்சம் மக்கள் முள்ளிவாய்க்கால் வரை துரத்திச் செல்லப் பட்டதால் அனைத்தையும் இழந்து, அகதிகளாக்கப்பட்டு யுத்த முடிவில் முட்கம்பிகளுக்கு மத்தியில் வைக்கப்பட்டு பிச்சைக்காரர்களைப் போல கையேந்தி வாழ வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டாார்கள். இன்று அவர்கள் தத்தம் சொந்த இடங்களில்போய் மீண்டும் குடியேற அனுமதிக்கப்பட்டாலும் அவர்கள் இன்னமும் தமது சுயமான பொருளதார வாழ்வை மீட்க முடியாமலும் சுய மரியாதையான வாழ்வை அடைய முடியாதவர்களாகவும் அல்லல்பட்டு அஞ்சி, நடுங்கி, ஒடுங்கி தமது கால்வயிற்றுக் கஞ்சிக்காக தமது காதுகளையும் நாவினையும் அடக்கி வாழ்ந்து கொண்டிக்கின்றார்கள்.


த. சித்தார்த்தன்   தி.ஸ்ரீதரன்

இந்த மக்களுக்கு அவர்களின் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையையும் உத்தரவாதத்தினையும் சிறிதளவேனும் உறுதியாக வழங்க முடியாதவர்களாகவே வடக்கின் தமிழ் தலைவாகள் உள்ளார்கள் - இவர்களில் ஒரு பகுதியினர் ஒப்பாரிவைத்து ஊரைக் கவரலாம் என முயற்சிக்கின்றனர். இன்னொரு பகுதியினரோ செல்லாக் காசான வாக்குறுதிகளை வழங்கி ஊரை வளைத்துப்போடலாம் என்ற முயற்சியில் உள்ளனர். ஆனால் அப்பாவித் தமிழ் மக்களோ வெளிநாடு ஏதும் வராதா? தங்களுக்கு உதவிகள் ஏதும் செய்யாதா? தங்களுடைய நியாயமான உரிமைகளை பெற்றுத் தராதா? என்று அண்ணாந்து வானத்தைப் பார்த்து ஏங்கி நிற்கின்றார்கள்.

### சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும்..

ஊரிலுள்ள தமிழ்தலைவர்கள் ஒற்றுமைப்படா விட்டாலும் வெளிநாடுகளில் உள்ள தமிழர் களாவது ஒன்று திரண்டு உள்ளுர் தமிழ்களின் அவல நிலையைப் போக்க ஏதாவது உருப்படியாக ஆக்கபூர்வமாகச் செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

8 இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் ஐரோப்பிய மற்றும் அமெரிக்கா கனடா ஆகிய நாடுகளிலும் அவுஸ்திரேலிய நாடுகளிலும் வாழ்கிறார்கள். இவர்கள் தமது சொந்த மண்ணை விட்டு புலம்பெயர்ந்து போனதால் தமிழர்களின் சனத்தொகை வீதம் இலங்கையில் கணிசமாக குறைந்துள்ளது. நாடு கடந்து போன தமிழர்கள் நல்ல நிலையிலிருந்தாலும் இங்கோ தமிழர்களின் அரசியல் பிரநிதிகளின் எண்ணிக்கை வீதம் குறைந்துகொண்டே போகிறது.. தமிழர்களில் அறிவும் ஆற்றலும் உள்ளவர்கள் வெளியேறிக்கொண்டே இருக்கிறார்கள் போராட்ட வரலாற்றோடு இணைந்த சமூக உணர்வு கொண்டவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகின்றது.

அநுமன்

இந்த வெளிநாட்டு தமிழர்கள் "சிங்கள அரசிற்கு எதிராக தமிழர்கள் தொடர்ந்தும் போராட வேண்டும்" " தமிழர்கள் தேசியம் சுயநிர்ணயம் ஆகியவற்றிற்கான உரிமைப் போராட்டங்களை விடாது தொடரவேண்டும்." "எதனை இழந்தாலும் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஓயாது முன் செல்ல வேண்டும்." என்று ஒற்றைக்காலில் நிற்கின்றார்கள். உள்ளூரில் நொந்து போய் இருக்கும் தமிழர்களுக்கு மீண்டும் மீணடும் உசுப்பேத்தி ஏற்கனவே ரணகளத்தில் சிதைந்துபோய் இருக்கும் தமிழ் சமூகத்தை எஞ்சியிருக்கும் கொஞ்சமும் மிஞ்சாமல் முழுமையாக சின்னாபின்னமாக்கி விடவேண்டும் என்பதில் வெளிநாட்டு தமிழ் பிரமுகர்கள் முழுமூச்சாக நிற்கிறார்கள். யுத்தத்தால் வெளிநாடுகளுக்குப் போய் இருக்கும் தமிழர்களில் ஒரு சத வீதத்தினர் கூட, இங்கு சுமுகநிலை தோன்றினாலும் மீண்டும் இங்கு வரப்போவதில்லை எனவே இந்த வெளிநாட்டவர்கள் இங்கு வாழும் தமிழர்களை நோக்கி உணர்ச்சி எழுப்பும் முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபடுவது மேலும் அழிவுகளுக்கே வழிவகுக்கும்.

### இனப்பிரச்சினையில் தமிழ்நாட்டு தலைவர்களின் அணுகுமுறை

இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் வேறுபட்டு, பலவீனமான நிலையில் இருந்தாலும் தமிழகத்தின் தலைவர்கள் இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வு மீட்சிபெறவும் அரசியல் ரீதியாக சுயாட்சிபெறவும் சமூக ரீதியாக சுய மரியாதையோடு வாழவும் வழிவகுப்பார்கள் என்று நம்பி இருப்பது இலங்கைத் தமிழர்களுக்கு பயனற்ற ஒன்றே


மாவை சேனாதிராசா   டக்ளஸ் தேவானந்தா

வெவ்வேறு கருத்துக்கள் கொண்டிருந்தாலும் தமிழகத்தின் தலைவர்கள் இலங்கைத் தமிழ்கள் நிலைமை கண்டு உள ரீதியில் அனுதாபமாக இருகிறார்கள் என்பது மறுப்பதற்கில்லை ஆனால், இங்கிருக்கும் தமிழ் கட்சிகள் எப்படியிருந்தாலும் பறவாயில்லை தமிழ்நாட்டு கட்சிகளின் தலைவர்கள் இலங்கை தமிழர்களின் அரசியல் மீட்சிக்கு தாமாக ஏதும் செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது மிகத் தவறானதாகும். உண்மையில் தமிழகத் தலைவர்கள் தமக்குள் போட்டி போட்டுக்கொண்டு வெளிப்படுத்துகின்ற சிங்கள எதிர்ப்பு கோஷங்களும் பேச்சுக்களும் இலங்கை வாழ் தமிழ் மக்களை சிங்கள மக்களிடமிருந்து மேலும் மேலும் பிரிப்பதற்கே உதவியிருக்கிறது.. தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் மன வேறுபாடுகளையும் குரோதங்களையும் சந்தேகங்களையும் தொடர்ந்து வலுவாக்குகிறதே தவிர தமிழ் மக்களுக்கு எவ்வகையிலும் நன்மை தருவதாக அமையவில்லை தமிழகத் தலைவர்களின் ஆக்ரோசமான சிங்கள இன எதிர்ப்பு கூச்சல்கள் சிங்கள மக்களை மேலும் மேலும் சிங்கள இன ஆதிக்கவாதிகளை நோக்கியே தள்ளி விடுகின்றது. இதனால் நியாயங்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய சிங்களத் தலைவர்களை சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு அற்றவர்களாக ஆக்கிவிடுகின்றது.

தமிழகத்தின் தலைவர்களுக்கும் சிங்களத் தலைவர்களுக்கும் இடையே ஒரு சந்தேகமற்றநட்பும் நல்லுறவும் ஏற்பட்டு அதன் மூலம் இலங்கை தமிழர்களுக்கு நன்மைகள் கிட்ட அவர்கள் வழிவகுக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக்கள் இப்போது மிகக் குறைவே அப்படியொரு நிலை ஏற்பட இன்னும் எத்தனை சகாப்தங்கள் எடுக்குமோ தெரியாது.

### இந்தியாவின் நிலைப்பாடு

இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என இந்திய அரசு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகிற அதேவேளை இலங்கையில் பிரிவினை வாதத்தையோ அந்த அடிப்படையிலான அரசியல் வன்முறைகளையோ எந்த வகையிலும் இந்தியா ஆதரிக்க மாட்டாது என்பதுவும் இப்போது தெளிவான ஒரு விடயமே அத்துடன் இந்தியா இலங்கை அரசுடன் நட்புறவின் அடிப்படையிலேயே இலங்கையுடனான தனது பொருளாதார மற்றும் இராஜரீக உறவுகளை வளர்த்து வருகிறது. இலங்கைத் தமிழ்களுக்கான உதவிகளையும் அந்த எல்லைகளுக்குள்ளேயே மேற்கொள்ளுகிறது. 1980 இல் அதாவது 1990 ம் ஆண்டிற்கு முன்னர் நிலவிய வகையான இந்திய இலங்கை உறவு நிலைமை மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் இந்தியா மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறது. இலங்கைத் தமிழர்களின் அரசியல் கட்சிகள் தமிழர்களுக்கான அரசியல் கோரிக்கைகளை ஒருமித்த குரலில் முன் வைக்க வேண்டும் என இந்திய அரசின் பிரமுகர்கள் தமிழ்க்கட்சிகளின் தலைவர்களிடம் திட்டவட்டமாக திரும்பத் திரும்ப கூறி விட்டார்கள். அப்படியானதொரு நிலை ஏற்பட்டால் தான் இந்தியா தமிழர்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளைக் கூட பரிசீலனைக்கு எடுத்து அவற்றை அங்கீகரிக்கும்படி இலங்கை அரசிடம் வலியுறுத்தும் என இந்தியா தமிழ்த் தலைவர்களுக்கு உறுதியாகக் கூறியுள்ளது. இந்தியா தனது சொந்த விருப்பப்படி எந்தவொரு அரசியல் கோரிக்கையையும் இலங்கை அரசிடம் வற்புறுத்த மாட்டாது என்பதுவும் இலங்கைத் தமிழ்களின் தலைவர்கள் எவ்வளவு தூரம் ஒற்றுமையாக நின்று தமது அரசியல் கோரிக்கைகளை ஒரே குரலில் மக்களின் உண்மையான கோரிக்கைகளாக முன்வைக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் எவ்வளவு தூரம் இந்தியாவின் இலங்கை தொடர்பான அரசியல் நிலைப்பாட்டோடு சமநிலைப்பட்டிருக்கிறது என்பவற்றைப் பொறுத்துத்தான் இந்தியாவானது எதிர்காலத்தில் இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தில் செயற்படுவது தங்கியிருக்கிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் சிலர் நினைப்பதைப் போலவோ, அறிக்கைகள் விடுவது போலவோ வடக்கு கிழக்கு மாகாணங்களின் 18 தமிழ் பிரதிநிதிகளில் தாங்கள் தான் 14 பேர் எனவே தாங்கள் சொல்வதின்படிதான் இந்தியா செயற்படும் என்பது கிணற்றுத் தவளையின் நினைப்பைப் போன்றதாகவே இருக்கும்.

இந்தியா இப்போது இலங்கைத் தமிழர் விவகாரத்தில் மனிதாபிமான அடிப்படையிலான செயற்திட்டங்களிலேயே ஈடுபட்டுள்ளது. அரசியல் ரீதியான விடயங்களை நோக்கியும் இந்தியாவின் ஆக்கபூர்வமான ஈடுபாடுகள் ஏற்படவேண்டும் என இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் உண்மையில் கருதுவார்களானால் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் தொடர்பாக குறைந்த பட்சமாயினும் ஒரு புரிந்துணர்வும் ஒருமித்த குரலும் உருவாகி வெளிப்படவேண்டும்

### ஐக்கியத்தின் முக்கியத்துவம்

எந்த நோக்கில் பார்த்தாலும் இலங்கைத் தமிழ் மக்களின் பொது நன்மைகள் அரசியல் பொருளாதார முன்னேற்றங்கள் என்ற அடிப்படையில் நோக்கினால் தமிழர்களின் அரசியல் கட்சிகள் தமிழர்களின் நன்மைகள் குறித்த விடயங்கள் தொடர்பாக தமக்கிடையில் கூட்டாக ஒருமித்த கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் அது துன்பத்தில் தோய்ந்து நொந்து போய் நம்பிக்கையற்றுக் கிடக்கும் தமிழர்களுக்கு எதிர்காலம் பற்றிய ஒரு சிறு நம்பிக்கையையாவது ஊட்டுவதாக அமையும்

தமிழர்களுக்கு உதவ வேண்டும் என உண்மையில் நினைக்கின்ற இந்தியா மற்றும் சர்வதேச சமூகங்களின் அக்கறையையும் ஈடுபாட்டையும் அவ்வாறான ஒற்றுமையே அதிகரிக்கச் செய்யும்

சிங்கள மக்கள் மத்தியிலிருக்கும் முற்போக்கு சக்திகளின் அதிகாரப் பகிர்விற்கு சார்ப்பான நிலைப்பாட்டுக் கருத்துகளுக்கு அவ்வாறான ஒற்றுமையே வலுவூட்டும் அது அரசாங்கத்திற்கு உள்ளேயிருக்கும் முற்போக்கு சக்திகளின் நியாயங்களையும் முன்னுக்கு கொண்டுவரும்

## புனர்வாழ்வு முகாம்களிலிருந்து 4000 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்



**புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வுப் பயிற்சி பெற்று வந்த முன்னாள் புலி உறுப்பினர்களான 403 பேர் வவுனியாவில் வைத்து புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.**

**புலிகளின் மருத்துவ பிரிவு, காவல்துறை மற்றும் விடுதலைப் புலிகளின் வெவ்வேறு பிரிவுகளில் பணியாற்றியவர்கள் என ஆண்களும் பெண்களும் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.**

**இவர்களை விடுதலை செய்யும் வைபவம் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் விஜிதமுனி சொய்சா, அமைச்சின் செயலாளர், வன்னிப் பிராந்திய ஆயு தப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபர் தீபால் தல்தாது, புனர் வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க, புனர் வாழ்வு நிலையங்களுக்குப் பொறுப்பான கேணல் மஞ்சுள குணவர்தன மற்றும் ,ராணுவ அதிகாரிகள் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.**

**இங்கு உரையாற்றிய புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியு குணசேகர, இதுவரையில் புனர்வாழ்வு பெற்றவர்களில் 4000 பேர் விடுதலை செய்யப் பட்டுள்ளதாகவும் ஏனையோரும் படிப்படியாக விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் கூறினார்.**

**அத்துடன் புனர்வாழ்வு நிலையங்களில் வாழ்வாதாரத்திற்குத் தேவையான தொழிற் பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், வவுனியாவில் திறக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு அதிகார சபையின் கிளை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தமது வாழ்வாதாரத்திற்கான தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்குரிய வங்கிக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்**

**விடுதலையானவர்கள் தமது விடுதலை குறித்து மகிழ்ச்சி வெளியிட்டதுடன், விடுதலையாகி வீடுகளுக்குச் சென்ற பின்னரும் தமது பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என செய்தியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளனர்.**

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press இல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.